1 ௨,௨.௩ : H17
N55

உ

ஸ்ரீ ராமஜெயம்.

## திருமாலிருஞ் சோலைமலை

# பெரிய அழகர் வர்ணிப்பு.

### விநாயகர் துதி.

மூலப்பாஞ்சுடரே முப்பொருளே முக்குணமே
நீலப்பொருப்பே நினைவில்வளர் நிச்சயமே
பேழைவயிறும் பெருங்கிம் புரிக்கோடும்
வேழமுகமும் விளங்கியமுந் நூல்மார்பும்
ஐந்துகரமும் அழகான மத்தகமும்
சுந்தரஞ்சேர்காதும் துதிக்கையும் நால்வாயும்
அங்கயக்கண்ணுளின்ற அப்பனே முன்னடவாய்
மங்களஞ்சேர்பொற்ரூ மரைக்கரையில் வாழுகின்ற
சித்திக்கணபதியே சிவபெருமான் புத்திரனே
மூத்திக்குவித்தே முடிக்கணியுஞ் [illegible]
வல்லபையைத் தன்துடையில் வைத்தபெருமானே
நல்லவரம்கொடுத்து நடம்புரிய வேணுமையா.

### சுப்பிரமணியர் துதி.

கானமயிலேறுங் கதிர்வடிவேல் நாயகமே
ஞானமுருக குமரா நாதாந்தப் பேரொளியே
கந்தாகடம்பா கட்டழகா என்னையிப்போ
வந்தாதரித்து அடியேன்றனக்கு வரந்தரவுவேணும்ப்போ
குறம்பாடுகின்ற குறத்திமகிழுங்கணவா
வரங்கொடுத்தெந் நாளுமெந்தன் வாக்கில்வரவேணுமையா.

### சரஸ்வதி துதி.

தாயேசரஸ்வதியே சதுர்முகத்தோன் தேவியரே
மாயோன்மருமகளே வாக்கில்வர வேணுமம்மா
வெண்டாமரையாளே வெள்ளைநிறப் பூங்குயிலே
தண்டமிழ்சேர் வாணியிடஞ் சார்ந்தருளுந் தற்பரையே
காவிமலர்பூத்த கண்மணியே பெண்மயிலே
நாவில்இருந்து நடம்புரிய வேணுமம்மா.

11 MAY 195
MA

## சோமசுந்தரர் துதி.

முக்கட்பாஞ்சுடரே கடம்பவன மூலலிங்கத் தற்பரமே
அக்கரவம்பூண்ட ஆலவாய்ச் சுந்தரமே
எங்கும் நிறைந்தருளும் ஏகபராபரமே
மங்களமாகயிப்போ வரந்தரவும் வேணுமையா
இந்திரவிமானத்தில் இலங்கவே தானிருக்கும்
சுந்தரச்சொக்கையா துணைசெய்ய வேணுமிங்கே,

## மீனாக்ஷியம்மன் துதி.

நாற்பத்து முக்கோணம் நடுவிருக்கும் நாயகியே
சீர்பத்தி தந்தருள்வாய் தெய்வ சிகாமணியே
மூவுலக மும்புரந்த மும்மூலைத் தடாதகையை
அவுலகம் போற்றுங் கயற்கண் மடக்கொடியே
பாண்டிமா தேவியெனப் பகருமீனாம்பிகையே
வேண்டியபேர்க் கின்பமருள் வித்தகியே காத்தருள்வாய்

## தேவர்கள் சித்தர்கள் துதி.

ஆதிசதுரகிரி அப்பன் மகாலிங்கம்
ஜோதிப்பலாவடியான் துணைசெய்ய வேணுமிங்கே
முப்பத்து முக்கோடி முனிவர் கணநாதர்
செப்பும் நவகோடி சித்தர்சத்த மகாரிஷிகள்
கொங்கணர் கோரக்கர் குருமூலர் போகரெனும்
பங்கமிலா மோனமுறும் பதினெண் மரைப்பணிவேன்.

## திருமால் துதி.

ஆதிவடமலையான் அப்பன் திருப்பதியான்
சேதித் திருவரங்கம் சோலைமலை காஞ்சிபுரம்
ஆழ்வார் திருநகரி யனந்தபுரங் கோஷ்டியூர்
வாழ்வாம் மதுரை வழக்குஞ் சிதம்பரமும்
இவ்விடங்கள் தோறும் இருந்துவிளையாடுகின்ற
செவ்வியுள்ள மாயழகன் சேவடியே தஞ்சமென்றேன்.

## மாரியம்மன் பேரில் வர்ணிப்பு.

மாதுகௌரி மகமாயி ராஜகன்னி
சாதுவே மாகாளி தாயே பராபரியே
மதுரையெல்லை யின்கிழக்கே வாழ்ந்திருக்கு மாரிமுத்தே
சதிரா யெனக்குவரம் சங்கரியே வாக்கருள்வாய்



தெப்பகுளங் காத்த சீரான வீரபத்திரி
செப்பமுள்ள மாரி திருவாக்குத் தந்தருள்வாய்.

## காளியம்மன் பேரில் வர்ணிப்பு.

காளி பகவதியே காரணியே காளிமுத்தே
ஏழைதனைக் கண்ணாலே யென்தாயே பாருமம்மா
மலையாள தேசமெல்லாம் வாழ்ந்திருக்குங் காளிமுத்தே
மலையா தெனக்கு வரந்தரவே வேணுமம்மா
பம்பை முழங்குதம்மா பார்வதியே யிப்போது
கம்பையை விட்டுக் காளி யெழுந்திரியே.

## பேச்சியம்மன் பேரில் வர்ணிப்பு.

வனப்பேச்சி யெந்தனுக்கு வாக்கருள வேணுமம்மா
க்ஷணப்பொழுதில் வந்துயிப்போ சங்கரியே வாக்கருள்வாய்
மயானந்தனைக் காத்தவளே மகேஸ்பரி யெழுந்திருநீ
கியாதியுள்ள பேச்சியம்மாள் கிருபைசெய்ய வேணுமிப்போ
ஆருமறியாமல் எனைப்பெற்ற அங்காள ஈஸ்வரியே
வாருமம்மா யிப்போது வரந்தரவு வேணுமம்மா.

## செல்லத்தம்மன் பேரில் வர்ணிப்பு.

பாண்டித் துரைமகளே பாப்பாத்தி வாக்கருள்வாய்
வேண்டி யுனைத்துதித்தேன் வேதப் பிராமணத்தி
மாலைக்கழுத்தி எனைப்பெற்றதேவி மஞ்சணை மார்பழகி
வாலைசிரிபுரையே வடக்குவாசல் காத்த மாயன்சகோதரியே
அம்மாவந் திவ்வேளை யெனை ஆதரிக்க நேரமிதே
இமமா நிலந்துதிக்க வடவாசற்செல்வி இரங்கிவர வேணுமிங்கே.

## கோசுகுண்டு ஒன்பது கம்பளம்
## சக்கம்மா தேவியின் பேரில் வர்ணிப்பு.

உயர்வான கோசகுண்டு ஒன்பது கம்பளத்தில்
ஜெயமாக ஆடிநின்ற சக்கம்மா தேவியம்மா
பெற்ற தாயைப்போல போராக ஆண்டவள்நீ
சற்றேமனதுவைத்துத் தானிரங்க வேணுமம்மா
உன்னைப்போல் தெய்வம் ஒருவரையுங் கண்டதில்லை
அன்னை தயாபரியே அன்புடனே காத்தருள்வாய்
ஒன்பது கம்பளத்தில் ஒழுங்காய் வரங்கொடுக்கும்
அன்பத்தோ ரட்சரியே அடியேனைக் காருமம்மா.

## இருளாயி அம்மன் பேரில் வர்ணிப்பு.

மட்டமுசிறிதாம் மதலைப்பிராயம் வணங்கா முடிகாடு
கொச்சிகளகாடு முத்திருளாயி குடியிருப்போ கீழ்காடு
ஆதிகிழக்கு மறவர்பதிக்கு அதிமறவர் சீமையிலே
சின்னமறவர் எனைப்பெற்றயிருளே சிவகெங்கைப் பூமியிலே
பெரியமறவர் எனையீன்றயிருளே பேர்போன கன்னுடு
மங்களகாடு இருளாயித் தாயே மறவர்பதிச் சீமையிலே
ஒருகையிற் பிள்ளைகளும் ஒருகையில் மைந்தனொன்றும்
கக்கத்தில் பிள்ளையொன்றும் மார்பிற் கனகரெத்தினமாலையொன்றும்
பதினறுமக்களும் என்னைப்பெற்றஇருளு பாலுக்கு நின்றழுக
அழுதபிள்ளை தானபர்த்தும் அருங்கிளியே கல்லாளே
ஆற்றைக்கிராய்வளைந்து அக்கரையே கோட்டைகட்டி
சுற்றிக்கிராய்வளைந்து இலைகுலுங்காசேரம் சூரியொன்று கைவாங்கி
குட்டி கிடைக்கவில்லையொன்று இருளு குறம்பாடியன்னேரம்
ஒருத்திக்கொருமகளாம் ஒன்பதாங் கெற்பமதில்
வயிற்றிருந்த கெற்பமதை வாங்கின எப்போது
பிள்ளைக்கறிசமைத்து யாவருக்கும் போடுமந்த வேளையிலே
அதிலும் ஓர் பிள்ளைக்கு கறியோ அகப்படவில்லையென்று
குலவையிடும் வேளையிலே முத்துயிருளாயி குத்தினள்சூலாடு
மனமும் இரங்கலையோ பாட்டனாண்ட மறத்திவரக்கூடாதா
ஏவற்பொருளே என்னைக்குடிகொண்ட இருளேநீவாவாவா
பாரமறத்தி என்னைக்குடிகொண்ட பழிகாரிவாவாவா
சேலைகொடியிலேயாம் என்னாச்சிக்குச் செல்லநகை பெட்டியிலே
மூக்குத்தி புல்லாக்கு என்னைப்பெற்றாளுக்கு முன்கையிற் பூங்காப்பு
வங்தென்கலிதீர பாலன்றனக்கு வரங்கள்மிகக் கொடுப்பாய்.

## இருளப்பசுவாமி பேரில் வர்ணிப்பு.

மாசிக்களரியும் வருகும் இளம்பிறையில்
பாரிவேட்டைநேரம் எனைப்பெற்றஇருளன் பதினெட்டுகாவிகையில்
ஈரசக்திவேலை சத்தச்சாகரமூர்த்தி இருள்கனிந்த வேளையிலே
கட்டினர் லங்கோடு எனைப்பெற்றஇருளுக்கு கையிற்றிருவோடு
கெம்பினுலிழைத்த செப்புக்கடுக்கான் காதில்
புலிபும்புலித்தோலாம் புள்ளிமானசனமாம்



மார்புரளப்பூணூலும் இருளப்பமூர்த்திக்கு மடிநிறைந்தவெள்ளேடும்
இரணகளப்பூமியிலே இருளன் இருந்துதவஞ் செய்கையிலே
தெற்கேவிழுந்தசடை இருளப்பசாமிக்கு சிவகாமிபூஜைசெய்ய
மேற்கேவிழுந்தசடை மேலுலகோர் பூஜைசெய்ய
கிழக்கேவிழுந்தசடை கீழுலகோர் பூஜைசெய்ய
அஞ்செழுத்துமந்திரமும் ஐம்பத்தோரட்சரமும்
முக்கோணசக்கரமும் மூர்த்திக்கு முன்னேதான் பூஜையிட
பூஜையிட்டுத் தானிருக்க இருளன் புதைகுழியாம் பூக்குடலை
ஒத்தமுகமும் சத்தசாகரமூர்த்திக்கு ஒருகுடலைப்பூவுகளும்
பிச்சிமலரெடுத்து இருளப்பமூர்த்திக்கு உச்சிச்சடைதான்வகுந்து
சடைக்கொருலிங்கம் தபசுபண்ணும் வேளையிலே
தபசோமுடியலையா ஆதிக்கிழவனாண்ட தாய்க்கிழவாமுத்திருளே
செத்தயிடந்தேடி ஜெபம்பண்ணும் வேளையிலே
மாண்டயிடந்தேடி எனைப்பெற்றஇருளன் மகாபூஜைசெய்தாலும்
பூஜைமுடிந்தது புதைகுழியைவிட்டு பூக்குடலைதான் தூக்கி
அஞ்சுமுகமும் ஆதிக்கிழவன்மார்பிற் கொஞ்சிவிளையாடியேதான்
பாண்டியன்கேணி பள்ளத்தெருவில் பவனிவரும்வேளையிலே
பாண்டிமுனிவந்து இருளன் கப்பரையைப் பங்கமதுசெய்கையிலே
குடலைக்கோமோசமென்று எனைப்பெற்ற இருளு கோபமாகவேதான்
அபயமபயமென்று அர்த்தசாமவேளை அலறுமந்தவேளையிலே
இடதுபுரம்பொன்குடலை வலபுரம்மார்காடு
வாதாடிவாதாடி எனைப்பெற்றகருப்பு வாங்கினர் பூக்குடலை
மனமுமிரங்கலையோ கோடாங்கிக்காரர் வைத்தாண்டமுத்திருளே.

## வருடாவருடம் புரட்டாசிமாதம், மீனாக்ஷி அம்மன் கோவில் நவராத்திரி கொலுவின்போது பேயோட்டுகிற வர்ணிப்பு.

தேவிதிருப்பு திரிபுரையா ளெந்திரியே
மாதுதிரும்பாயா மங்கையிடஞ்சென்ற மணவாளன் தோளையா
மாதைத்தொடர்ந்தவனே இன்றுனைவே வாக்கருளவேணுமம்மா
காலாந்தலமாங் கோபுரத்தைக்காத்த கலைமுனியையாநீ
கோபுரத்தைக்காத்த பாரச்சடையே கொத்தளத்து மாமுனியே
கண்ணாலே நீபார்த்து மனவருத்தந்தீரக் கருணையுடனே [illegible]

சமிராஜன்பெற்ற கண்மணியே கிளையனே
மாந்தத்தொடர்ந்த வல்லவா சொல்லேனீ
தண்ணீர்மயக்கமோ இவனைத்தொடர்ந்த சமர்த்தன்வெளியேறுமா
சேந்தாஸ்கொண்டி கிடக்குதுளுஞ் சப்பாணி
வாதக்கால்கொண்டி வல்லபா சப்பாணி
மாதைத்தொடர்ந்த வகைசொல்லுதற்கு வந்திரக்குறுணிமுத்தே
கன்னியைத்தொடர்ந்த கட்டழகா சோலைமுத்தே
ஆதிகிலையும் அடியேன்றனக்கு அருள்புரியவேணுமையா
மட்டஞ்சிகையில் இந்த மங்கையினிடையிலே
மாதம்பயந்தாள் மாமுனியுந் தான்தொடர்ந்தார்
தொடர்ந்த வழியுமிப்போ தோன்றவில்லை சொக்கநுக்கு
பருவமுந்தானுமிப் பக்குவமுந்தானுமிப் பயிர்பலவில்லாதபடி
மாதமலடாக வைத்திருக்கக் காரணமேன்

## மீனாக்ஷியம்மன் பேரில் துதி.

என்னவிதமென்று தேவியிடத்தி விதவியால் கேட்பமென்று
அம்பிகைமீனாக்ஷி என்னைப்பெற்ற அம்மைகாமாட்சியே
உன்னுடையகோவிலிலே அடிமைவந்து உட்கார்ந்திருக்குதம்மா
கண்பார்த்தருள்புரியும் என்னைப்பெற்றதேவி காத்துரட்சித்தருள்வாய்
கண்மாய்க்கரையும கரைமேல் புளியடியும்
ஆலமரமும் அழகான தோப்புகளும்
விட்டுவெளியேறுபோ உனக்கு வேண்டியதோர்சாமன்கள்
கொண்டுவந்து நான்தரேன் குழந்தையமக்காதே
சாமிதிரும்பு என்னையாண்ட தங்கவெளியேறுபோ
பாலன்வருந்துவதை ருத்திரணப்பூமி பார்முழுதுங்கேட்டிலையா
குழந்தைவருந்துவதை உன்கொடுமுடிக்குங் கேட்டிலையா
பம்பைமுழங்குவது என்னைப்பெற்ற பாப்பாத்திவெத்திரியே
கம்பையைவிட்டு முத்தாரக்கு கதறிவெளி யேறுபோ
மாணிக்கவென்னடை மடியிற் புரளையோ
ஆடத்தெரியாமல் அறிவுகெட்ட பேயனே!
சுற்றத்தெரியாமல் சுணைகெட்ட பேயனே!
இடமும்வலமும் இருபுறமுஞ் சுற்றலையே
மாலைகுலுங்க மயிரவிழ்த்து ஆடலையே



தேம்பமனக்கலையே இன்னும்பூமியிற் கைபோடகாணலையே
எட்டிப்பிடிக்கலையே இருபுறமுஞ் சுற்றலையே
தொட்டால்விடாத தொட்டியப் பிசாசே!
கட்டையிலுங்கட்டை இதுபெரிய கருவேலங்கட்டையடா
[illegible] அலங்காரம இன்றைக்குத் தெருவெல்லாஞ் சிங்காரம்
தலையவிரிக்கலையா சுற்றுகோம் சதிராக ஆடலையா
சுற்றத்தெரியலையா சுணைகெட்ட போனாய்?
மாதிடத்திச்சென்ற மன்னவா செஞ்சடையே
பாண்டிவளநாடு பழமதுரை நன்னாடு
தண்ணீர்கரைக்குத் தங்கம்வரும் வேளையிலே
செட்டியப்பெண்ணென்று தேடிச்சிறையெடுத்தாய்
பாப்பாரப்பெண்ணென்று பார்த்துச் சிறையெடுத்தாய்
கம்மாளப்பெண்ணென்று நேதிச்சிறையெடுத்தாய்
அம்பட்டப்பெண்ணென்று அறிந்து சிறையெடுத்தாய்
மாட்டியப்பெண்ணென்று மகிழ்ந்து சிறையெடுத்தாய்

## சுவாமியை வருந்தி யழைக்குதல்.

எத்தனைநாள்காத்தவது இரக்கலையா செஞ்சடையே
கணக்கிடைக்கலையே கண்ணுக்குத் தோணலையே
இல்லாதநாடு இருட்டோடாகுதம்மா
இப்பை பொடிக்கலையே இருபுறமுஞ் சுற்றலையே
மாதுதலைவிரித்து மனம்போல ஆடலையே
அஞ்சடை கொஞ்சிவா அழகுசடை மார்பா
கொஞ்சுஞ்சடை பின்னவிட நீகோலாகலமாக
சுந்தரியைப்போலே உன்பம்பையிரித்து நீ ஜோக்காக ஆடாயோ
வந்திட்டான்வந்திட்டான் இந்தச்சமயம் மாரட்டுப் பொன்கருப்பு
இனிமேல்மயக்கமில்லை எனக்குவருத்தமில்லை
புத்திமயங்காதே போகாதே நீதானும்
சத்தியமாகத் தான்சொல்லு ஓர்வசனம்
வார்த்தைரெண்டு சொன்னால் வம்புதும்பு செய்யமில்லை
பார்த்து ஆலோசித்துப் பகருவாயோர்வசனம்
என்றுதான்கேட்கப் பெண்ணுளும் இன்பமுடனே தசொல்வாள்
இந்தப்பெண்மேலே இவ்வளவுநாளாய் இருந்தேன் பிரியமதாய்

இருந்தேயனைவிரட்ட என்னைநினைத்தாய்பயலே
வங்கொலையால்மாண்ட இம்மாதைத் தொடர்ந்தவன்யான்
எந்தவூர்சொல்லென்று என்னைமறுத்துக் கேட்டாய்
ஊரின்பேரென்னவென்று உண்மையுடன் கேட்டதினால்
சொல்லுகிறேனப்பா துரைமகனே நீங்களு
கூடைத்தேங்காய்பழமுங் கொண்டுவந்து வைத்தபின்னும்
இருபத்தொருபணமும் இயல்புடனே வைத்தாக்கால்
போறேனிதோவெனவே புன்சிரிப்புக் கொண்டுசெல்லும்

## பிசாசுவிட்டு விலகுதல்.

காடுஞ்செடியுங் கண்மாய்க்கரையுங் கரிசல்குளத்தருகே
ஆலமரமுஞ் ஜோடிரெண்டாக அருகேபுளிமரத்தில்
இருந்தேன் வெகுகாலா யேனென்றுந் தேடவில்லை
இந்தமங்கைதானும் இவள்வருதும் போதினிலே
அன்றேயோர்பேட யறையவெழுந்தேன் மதுரை
குன்றைநிகருமொட்டைக் கோபுரத்தான் மன்றாடி
வேண்டினதி னாலுமுயிர் வேதனைசெய்யாதுவிட்டு
தூண்டிஇந்தமாதைத் தொடர்ந்தேனா னன்றுமுதல்
பாப்பாரப்பெண்ணென்று பார்த்துப்பிடித்தேனான்
அம்மா ளுடைய ஆக்கினை யின்படியே
போறேன்போறே னெனவும் பொருக்கமுடியாதெனவும்
என்றுநான் சொன்னவுடன் அப்போ இயல்பாக வேகுதித்து
சூடனைக்கைவாங்கிச் சொன்னாளே போரேனென்று
போறேன்போறேனெனவே போனானே சக்கிலியன்
இந்தமங்கைதன்னை இனிநினைக்க மாட்டேனென்று
முடிவாங்குவாயென்று முடிபிடித்துத் தான்கொடுத்து
போனது பிசாசு மங்கை பொற்றுமறைமூழ்கி
மங்கைநல்லாளும் அம்மாளை மனதில் மிகநினைத்து
போனாளே வீடுதனிற் சந்தோஷமாகப் புருடனுடனேகலந்தாள்
சக்கிலியன் நீங்கினதால் தலைமகனைப் பெற்றெடுத்து
சுகசீவியாக மக்களைப்பெற்றுச் சுகமாக வாழ்ந்திருந்தாள்.

முற்றிற்று.

ஸ்ரீ ராமஜெயம்.

திருமாலிருஞ் சோலைமலை,

# கிருஷ்ணாவதார,

# பெரிய அழகர் வர்ணிப்பு.

## திருஅவதாரஞ் செய்தல்.

சீர்கொண்டிலங்கும் திருமாலழகன்
ஜென்மித்த காரணத்தைப்
பார்புகழ யானுரைக்கப் பச்சைமால் தன்னைப்
பணிந்து நமஸ்கரித்து
மாயன் திருக்கதையை மானிலத்தோர்போற்ற
வர்ணிப்பாய்த் தானுரைக்க
நேயமுடன் நெஞ்சகத்தில் நீலமேகம் பரமசாமி
நிலையாக வேயிருப்பாய்
அம்புவியோர் கொண்டாட அழகுமலைநாதன்
அவதரித்த காரணத்தைத்
தெம்புடனே யானுரைக்கத் திருவேங்கடநாதா
திருவாக்குத் தந்தருள்வாய்.

## தேவர்கள் முறையிடல்.

செந்திருமாலைத் தேடித் தேவர்களும்பூமகளும்
தெரிசிக்க வேணுமென்று
வந்துதிருப் பாற்கடலில் மாலழக மூர்த்தியை
மனமகிழவே துதித்தார்
கருங்கடல்போற் பாற்கடலில் கார்மேக வண்ணன்
கண்ணுறங்கும் யோகம்விட்டு
நெருங்கிவருந் தேவருக்கு மனம்போல வேதான்
நிறைவாய் வரங்கொடுத்து
அனந்தசயனத்தைவிட்டு ஆதிமூலம் பரமசாமி
அன்பாக வப்போது
நினைந்துதான் மாயழகர் நீதியாஞ் சோதி
நேர்மையுடனே யெழுந்து
வடமதுரை யாளும் சூரசேனன் புதல்வன்
வசுதேவராஜ னென்போன்

திடமால் மணம்புரிந்த பெண்ணுக் கணிகலமாந்
தேவகியால் தன்வயற்றில்
பூமிபாரந் தீர்க்கப் புண்யபுரு டோத்மன்
புத்திரனாகச் செனித்து
க்ஷேமமுடன் திங்கள்பத்தும் தேவகிக்கு
நேர்மையுட னேநிறைய
தருமந் தழைத்தோங்க சருவேஸ்வரனைத்
தான்தேவர் போற்றிசெய்ய
கருமந் தவிர்த்துவிடக் கண்ணபிரான்றன்னைக்
காசினியோர் கொண்டாட
ஆவணிமா தத்தில் அமரபக்ஷத் தட்டமியில்
அவதாரஞ் செய்வதற்குத்
தேவரெல்லாங் கொண்டாடத் தேவாதிதேவன்
ஜென்மித்த தென்னசொல்வேன்

## கிருஷ்ணவதாரஞ் செய்தல்.

சங்குசக்கரந் தனுவாள் சச்சுதானந்தனுக்குத்
தண்டாயுத முதலாய்
செங்கரங்கள் நான்கினிலுஞ் செங்கமலக் கண்ணனுக்குச்
சிறப்பாய்த் தகதகென
வாகான மார்பில் மாயாவுதாரனுக்கு
மலர்மங்கை கூத்தாட
பாகாய் மழலைமொழி பாரளந்த மாயனுக்குப்
பவளவாய் தேனூற
வாய்ந்த சிரசதனில் வைகுண்ட வாசனுக்கு
மாமகுடந் தான்துலங்க
ஏய்ந்தரத்தினக் குண்டலங்கள் இலக்குமி நாதனுக்கு
எங்கும் பளபளென
கவுஸ்துவா பரணமின்ன காராழி வண்ணனுக்குக்
கண்டமதிற் றான்ஜொலிக்க
பவுத்தர்தொழும் தோளில் பஞ்சாயுதன் றனக்கு
பாங்குவளை யங்கள்மின்ன
போதமணி மேகலைகள் புண்ணிய புருடோத்மனுக்குப்
பொன்னுடை மேற்றுலங்க
சீதான்றன் பூமுடிமேற் றுளப மலர்மாலை
திக்கெங்குந் தான்மணக்க
கருமேகந் தன்னிலொரு செங்கமலக்காடு
கனிவாகப் பூத்ததுபோல்



திருமேனி தான்துலங்க செங்காழிக் கையன்
ஜென்மித்தார் பூமியிலே
மூவுருவுந் தானவனாய் மோகினி சொரூபன்
முத்தொழிலுந் தானடத்தி
தேவுருவாய் வீட்டிருக்குந் திருமாலழகன்
ஜென்மித்த காரணத்தை
கண்டே அதிசயித்து வசுதேவராஜன்
கண்கொள்ளாப் பேரின்பம்
கொண்டு மனமகிழ்ந்து கோவிந்த நாயகனைக்
கொண்டாடித் தான்துதிக்கத்
துதித்த தகப்பனுக்குச் சோலைமலையழகன்
சொல்லுவா ரோர்வசனம்
மதித்தஆய்ப் பாடிதனில் நந்தகோபன் தேவி
மாது அசோதையுமே
பெற்றிருக்கும் பிள்ளைதனை இன்னதென்று தானும்
பிரசவத்தின் வேதனையால்
உற்றறிய மாட்டாமல் ஓரறையி லசோதை
உறங்குகிறாள் பெண்மாது
இத்தருணந் தன்னில் இருகையாலென்னை
யேந்திநீ யவ்விடத்தில்
வைத்தவள் பெற்ற பெண்குழந்தை யையெடுத்து
வாகாக யிங்குவைப்பாய்

## தேவகிக்குத் தேருதல் சொல்லுதல்.

வஞ்சமுள்ள சஞ்சனுயிர் வசுதேவமன்னா
மடியவே செய்துவிட்டு
தஞ்சமென வுந்தனிடம் மாயாவதாரன்
வந்திடுவே னென்றுரைத்தார்
இந்தவித மாகவுமே இலக்குமி நாதன்
இனிமையாய் வார்த்தைசொல்ல
நந்தவசு தேவருடன் தேவகி யாளுந்
தானே மனங்கலங்கி
வருத்தமுற்றா ளவ்வேளை வானோர்க்குபகாரன்
மாதாவைத் தான்போற்றி
திருத்தி யுபசரித்து ஜெகன்மோகனரூபன்
சிறியவொரு பிள்ளையைப்போல்
வடிவெடுத்தா ரப்போது வரதவெங்க டேசனை
வாரியெடுத் தேயணைத்து

கடிமலர்க்கை யாலேந்தி வசுதேவராஜன்
கனிந்துவழி சென்றிடவே
இருகால் விலங்குகளும் கோட்டைவா சற்கதவும்
யிட்டுவைத்த தாப்பாளும்
திருகாது தான்விலக வீடுதனிற் காத்திருந்த
சேவகர்கள் கண்துயில
கோட்டைதனைக் கடந்து வசுதேவ ராஜன்
கொண்டுவழி கூடிவர
வாட்டமில்லா லோகமெல்லாம் மாயாவதாரன்
வழங்கிவிட்ட மாய்கையினால்
இருண்டு கருகருத்து பூழுமுகில் கூடி
யிடைவிடாமற் பரவி
மருண்டுகோ ஷான்றி சப்தமேகஞ் சேர்ந்து
மழைமாரி யாய்ப்பொழிய
ஜோதிமுகக் கண்ணபிரான் சுவாமியழகுள்ள
தோற்றம்வழி காட்டிடவே
ஆதிசேடன் படங்கள் அகிலைத் தேவனுக்கு
ஆயிரமும் வெண்குடைபோல்
மீதே சிரசருகில் தலையாயிரமுடையோன்
விரித்துவர வப்போது
மாதேவகி மைந்தன் றனைக்கொண்டு அப்போ
வழியே வரும்போது

## யமுனை வழிவிட்டுக் கொடுத்தல்.

பாற்கடலை விட்டுப் பாரளந்த மாயோன்
பார்தனில் வந்தானெனவே
ஏற்க யமுனைநதி மாயவனைக் காணுவர்போ
லிருகரையும் பொங்கிவர
வந்தா னெனவறிந்து பொங்கிவரும் யமுனை
வழிவிலகித் தான்கொடுக்க
சிந்தாகுலந்தீர்த்து வசுதேவன் றானுஞ்
சென்று ராய்ப்பாடியிலே
பிறந்தபிள்ளை யின்னதென்று நந்தகோபன் றேவி
பிறசவத்தின் வேதனையால்
உறங்கும் பொழுதில் உலகளந்த மாயோனை
ஒருவருக்குந் தோணாமல்
தான்வைத் தறைவீட்டில் அசோதைபெற்ற
தையல்தனைத் தானெடுத்து



தேன்வைத்த மாலையினான் வசுதேவ ராஜன்
சென்றுமனையிற் புகுந்தான்
கொண்டுவந்த பெண்மகவும் அந்த அறைவீட்டில்
கூகாவென் றேயழுக
கண்டுவடி. வாளுருவி பொல்லாத பாவி
கஞ்சனெனுந் துஷ்டனென்போன்
மனக்கவலை தானும் இக்குழந்தை யோடு
மகிழ்வாய்த் தொலைந்ததென்று
தனக்கிளைய தேவகியாள் செங்கையலைக் கையால்
தழுவுகின்ற பெண்ணரசை
வன்பளிங்குப் பாறையின்மேல் பெண்மகவை ஓங்கி
வாரியடிக் கையிலே
முன்கரத்திற் பெண்குழந்தை உக்கிரமாகாளி
முடிகிப் பரித்தெழுந்து
வாரியடிக்கு முன்னே கஞ்சன்
மார்பிலிடி வீழ்ந்ததுபோல்
மூரியுதைத் தண்டமுதல் தேவர்களும் வானவரும்
மூவுலகமும் பதற

## கஞ்சனைப் பார்த்துக் காளி சொல்லுதல்

வானிற் பிறைபோல் இரண்டுகடவாய் தனிலும்
வக்கிரதந்தஞ் சோதிமின்ன
வீணிற் பொதிந்து செம்பவளக் காடனைய
விரசடை பின்னலிட்டு
மார்பிற் கவுஸ்துமணி ஆதிபரா சக்திக்கு
வாகாய்ப் பளபளென
சார்பு பெருஞ்சூலம் ஆதிபரா சக்திக்குத்
தடக்கரத்திலே விளங்க
காலிற் சிலம்பு ஆதிபரா சக்திக்குக்
கலகலென வேஜொலிக்க
பாலிற்சிறந்த மொழி கானகத்தில் வாழுகின்ற
பைங்கிளிகளைப் பழிக்க
காளி வடிவாக எனைப்பெற்ற தேவி
கஞ்சனைப்பார்த் தோதுகிறாள்
நீள்பளிங்குப் பாறையின்மேல் என்னை யிப்போது
நீயடிக்கக் காரணமேன்
ஒருவழியிலே பிறந்து ஒருவழியிற் போய்வளர்ந்து
உன்னைவந்து கொன்றிடுவான்

வருபழியைத் தேடுவது அடாபாவி கம்சா
மன்னவர்க்குத் தர்மமிதோ
என்றுசொல்லித் தான்மறையக் கஞ்சனெனும் பாவி
பேக்கம்பிடித் தயர்ந்து
இன்றுதித்த பிள்ளைகளை எங்கிருந்தாலும்
இப்போதே கொல்லவென்று
தூதர்களை யேவிவிட பூதனையாடன்னைச்
சுகமாக அப்போது
[illegible] பேசி பிறந்த குழந்தைகளை
வடிவெடுத்துக் கொள்ளுமென்றான்
வந்தொரு பூதனையும் வைகுந்த நாதன்
வாகாய்த் தவழ்ந்தோடி
புத்திமகிழ்வந்த புண்யபுருடோத்தமனைப்
பூதனையாள் தானெடுத்து

## பூதனை முத்தி பெற்றது.

விடப்பாலமுதூட்ட வேணுகோபாலன்
மெல்லமெல்ல வேசிரித்து
நடப்பாலமுதொழுக தாமோதரப் பெருமான்
தன்வாயதனில்வைத்து
குண்டலங்களாடக் கோவிந்த மூர்த்தி
குறுஞ்சிரிப்புக் கொண்டுமுக
மண்டலங்கமின்ன மரகதமேனிக் கடவுள்
வாயினாற் பேய்முலையை
உண்டிட வாய்வழியே உலகளந்த மாயோன்
ஓடவிட்டார் பாலையெல்லாம்
பண்டுதனைப் பாலுடனே பூதபா டன்னுயிரைப்
பாங்காக வாங்கினபின்
சடா ரூன்றனையும் சங்காழிக் கையன்
தான்காலா லேயுதைக்க
கிளிதமா யெம்பெருமான் பொதுவருடைய
வீடெல்லாம் போய்ப்புகுந்து
தயிர்பால்நெய் வெண்ணெயெல்லாம் சர்வலோக நேசன்
தானவாரியே புசித்து
பயிலவே ஆய்ச்சியரைப் பாற்கடல் வண்ணன்
பரிகாசஞ் செய்திடவே
ஆய்ச்சியர்களெல்லாம் நந்தகோபன் தேவி
யசோதையிடம் வந்துரைப்பார்



காய்ச்சியபால் வெண்ணெயெல்லாம் எட்டா உரிமீது
காணு தொளித்துவைக்க
வந்துவந்து தான்திருடி மாதவ கோவிந்தன்
வாகாய்ப் புசித்திடுவான்
சிக்கையுடன் மூப்பினமை செங்கமலக் கண்ணன்
சிற்றேனு மெண்ணாமல்
பார்த்தவ ரெல்லாஞ்சிரிக்க பச்சைமா லச்சுதன்
பரிகாசஞ் செய்திடுவான்
ஆத்திரத்துடன் பாலகனைத் தெண்டித் திப்போது
அடக்குவா யசோதையம்மா
என்றமுறை யிட்டவுடன் கோபியர்கள்
ஒல்லோரு மேகிடவே
சென்றார்களென்று சங்காழிக் கையன்
சிரித்துமகிழ்ந்திருக்க
ஒன்றுஞ் சொல்லாமல் நந்தகோபன் தேவி
யிருந்தா ளொருநாளில்
தாதவிழும் பூங்குழலாள் மணிமடி யிலிவைத்துத்
தயிர்கடையும் வேளையிலே

## கிருஷ்ணனை உரலோடு கட்டுதல்.

பொங்கியது பாலெனவே நந்தகோபன் தேவி
பூரித்தெழுந் திடவே
தங்குதயிர்த் தாழிதனில் தாயா யசோதை
தான்மறைத்த வெண்ணெயெல்லாம்
கையினால் வாரியுண்டு காயாம்பு வண்ணன்
காலோட்டங் கொண்டிடவே
தேடினாள் மைந்தனையும் நந்தகோபன் தேவி
செல்வமகன் பின்னாலே
ஓடினாள் தேடி உலகளந்த நாதனையும்
ஒருகொடியிற் றன்பிடித்து
வன்றிரள் சேர்வின் மாயாவ நாதன்
மருதமரத் தோரேவில்
கன்றளியுந் தாம்பாலே நந்தகோபன் தேவி
கட்டினா ளப்போது
வாய்த்தகட்டுங் கட்டை மாயா விநோதன்
வலுக்கொண் டிழுத்திடவே

சாய்ந்து மருதமரம் — ஆதியிற்றான் பெற்றுவந்த
சாபமது தீர்ந்ததுவே

நந்தகோபன் றன்னிடத்தில் — நாக சயனன்
நல்லமகன் போயிருந்து

சந்தோஷமாகவே தான் — நந்தகோபன் வீட்டில்
தான்வளரும் போதினிலே

பச்சைமா லச்சுதன் — பத்து வயதில்
பசுமேய்க்க வேணுமென்று

கொச்சைப் பசுவாயிரமும் — மயிலையிலுங் கோடி
கொடுவை பதினாயிரமும்

கமலையிலே ஆயிரமும் — வெடிவாலில் மூன்னூறு
காராவில் வண்ணலட்சம்

செம்மரையி லாயிரமும் — ஜெகதீசன் மேய்க்கும்
சிவலைப்பசு வோர்கோடி

வண்ணலட்சம் பாற்பசுவை — மாயாவதாரன்
வாகாக வுண்டுபண்ணி

அண்ணல்பல பத்திரனை — ஆதிமூலம் பரமசாமி
முன்னமே போகவிட்டார்

வேகமுள்ள கன்றுகட்கு — வேணுகோபாலன்
வீரமணி தான்போட்டு

## கிருஷ்ணன் பசுமேய்க்குதல்.

போகவிட்டார் காராவை — புண்யபுருடோத்மன்
பூமிமிகத்தான திர

இடையர்மக்க ளோடிருந்து — இலட்சிமிக்கு நாதன்
இசைவான கானகத்தில்

தடையறவே கன்றுவைத் — தண்டுளப் மார்பன்
தான்மேய்க்கும் வேளையிலே

பள்ளிகொண்டு தானெழுந்து — பச்சைமா லட்சுதன்
பார்த்தார் பசுக்களையும்

தள்ளிப்போய் மேய்ந்ததினால் — தாமோதரக் கடவுள்
தன்விழிக்குத் தோணாமல்

ஆத்திமரத்தடியில் — அருளாழி வேந்தன்
சாத்திவைத்த வேய்ங்குழலை

பார்த்துமகிழ் வாயெடுத்துப் — பரமபுருடோத்மன்
பண்பாக வாயில்வைத்து

ஊதினார் வேய்ங்குழலை — அன்பர்க்குபகாரன்
உலகமெங்கும் தான்கேட்க



ஆதிசேஷனும் நடுங்க — நீலமேகவாயி
வைநுசத்தர் தான்கேட்டு

ஐயன்குழ லிசையை — ஆய்ப்பாடியி லிருக்கும்
ஆச்சியர்கள் தான்கேட்டு

மையலை யுண்டாக்கும் — மாயா விநோதன்
வடிவழகுக் காசைகொண்டு

கைவளைகள் தான்சரியக் — கோபியர்கள்
காற்சிலம்பு பண்பாட

மைவளையும் பூங்கூந்தல் — ஆச்சியர்க்கு
மறுத்தோர் புறஞ்சரிய

இடையி லிடையவிழ — சுந்தராஜ மூர்த்தியை
யிருக்குமிடந் தேடிவர

படைவிழியார் காணிநிற்கப் — பச்சைமா லட்சுதன்
பாவையரைத் தானணைக்க

பட்டமாங்க ளெல்லாம் — அய்ய னிசைகேட்டுப்
பால்கறந்து தான் றழைக்க

துட்டமிரு கங்களெல்லாம் — நெடியோ னிசைக்குச்
சூழ்ந்தே திரண்டுவர

## கிருஷ்ணன் ஸ்ரீங்குழலுக்குருதல்.

அரம்பையர்க ளெல்லாம் — ஆதிமூல நாதன்
அநுராகங் கேட்டுநிற்க

உரம்புகுந்த சூரியன்தேர் — அய்யனிசைகேட்டு
ஓடாமலே திகைக்க

விமல னிசைகேட்டு — கோரவாய் நாகம்
விடப்பா லமுதொழுக

கமல மெல்லாம் பொய்கைதனில் — கண்ணனிசைக்குருக
கனிவான தேனொழுக

பறவைபெருங் கூட்டமதில் — அய்யனிசை கேட்டுப்
பகைமறைந்து சூழ்ந்திருக்க

கறவைமுலை யுண்ணாமல் — கண்ண னிசைகேட்டு
கன்றுகள்பிர மித்துநிற்க

ஆவினமு மேயாமல் — அய்யனிசை கேட்டு
அசையாமற் றானிருக்க

காவினமும் சோலைகளும் — மாய னிசைக்குக்
கமழுகின்ற பூச்சொரிய

வண்படா மாலைதனைச் — செம்பொன் மணிமார்பிலிட
வானவர்க ளெல்லோரும்

பண்டமுத முண்டதிலும் பரம னிசைகேட்டுப்
பாங்காய் மனங்குளிர
தமையன் குழலிசையைத் தானவரும் வானவருந்
தான்கேட் டுளமகிழ
உமையவளும் மற்றெவரும் சந்தோஷ மூற்று
மூவரிதனில் சீராட
இடைக்குலத்தோன் றான்மகிழ ஆதிமூலத்தின்
இசைகேட் டுளமுருகி
படைக்குந் தொழிலைவிட்டான் கலைமகள் சமேதருடன்
பங்கயத்தில்சு வாழ்பிரமன்
அப்போ பசுக்களெல்லாம் ஊதுசத்தங் கேட்டுயென
தையனையுந் தேடிவர
செப்பமுடன் பாற்பசுவைச் செங்கமலக் கண்ணன்
சேரச் சரிபார்த்து
மாடுசரி பார்த்து மாயழக மூர்த்தி
மணிப்பசுவைக் காணோமென்றார்
ஓடும் பசுவதனில் உலகளந்த பாதன்
ஒருபசுவைக் காணோமென்றார்

## மாடுகளை எண்ணிச் சரிபார்த்தல்.

காலிசரி பார்த்தக் கரியமா லழகன்
கபிலைப்பசு காணோமென்றார்
பாலிற் சிறந்தமொழி பாற்கடலில் வாசன்
பாற்பசுவைக் காணோமென்றார்
தப்பின பசுக்களெல்லாம் தண்டுளப மார்பன்
சரிபார்த் தரைகொடிக்குள்
செப்பமுடன் கொண்டுவர சங்காழிக் கையன்
சிறுவர்க் குரைத்திடவே
ஓடிச்சிறுவ ரெல்லாம் பாற்பசுவைத் தேடி
உற்றதொரு கானகத்தில்
பாடிமிக வோடிவந்து வணங்கிச்சிறுவர்களும்
பாற்பசுவைக் காணோமென்றார்
வந்து பணிந்தவற்கு மாயாவ தாரன்
வாழ்த்தி ஆசீர்வதித்து
அந்தி நேரந்தனிலே காணாமற் போன
ஆவுதனைத் தானழைத்து
பால்கறக்க வேணுமென்று பச்சைமா லச்சுதன்
பரிவாய்க் கயிறெடுத்து



வாலிதனைக் கொன்ற மாயழக மூர்த்தி
வரவழைத்தார் பாற்பசுவை
ஆடிக்கறந்தாராம் அழகமலை நாதன்
ஐந்துலக்ஷம் பாற்பசுவை
பாடிக் கறந்தாராம் பள்ளிகொண்ட மாயோன்
பத்துலக்ஷம் பாற்பசுவை
ஆயன்கறந்த குடம் அகிலத் தேவன்
அரைக்குடமுங் காற்குடமாம்
மேய்ப்பான் கறந்தகுடம் விமலர்க் கனுகூலன்
மேற்குடமுங் கீழ்குடமாம்
கொட்டிக் கறந்தாராம் கோபால மூர்த்தி
கோடிலக்ஷம் காராவை
பட்டிதனி லடைத்துப் பாரளந்த மாயோன்
பார்த்திருக்கப் பண்டொருநாள்
கிட்டிவரும நாரைதன்னை வாயைப் பிடித்துக்
கீறியே கொன்றுவிட
எத்தனையோ ராக்ஷதர்கள் கஞ்சன்ற னேவலினால்
இடர்விளைக்க வந்தார்கள்
அத்தனை பேர்களையும் அருளாழி வேந்தன்
ஆங்காரமாய்ச் செயித்து

## சுவாமி அழகமலை வந்தது.

கஞ்சன்றனை வதைத்து அழகமலை தனக்குக்
கருத்தாய் வரநினைந்து
தஞ்சமென் றோரைக்காத்து ரட்சிப் பதற்குத்
தானெழுந்து அப்போது
வடமதுரை விட்டு மாயாவதாரன்
வந்தா ரழகமலை
திடமுடனே வந்தபின்பு திருமா லழகனுக்குந்
திருப்பணி யுண்டாக்கி
சுந்தரப்பொற் கோவிலிலே தாசர்களைக் காக்கச்
சுவாமியுந்தான் வந்தபின்பு
சிந்தைமிக மகிழ்ந்து அழகமலை தன்னிற்
சிறப்பாகவே யிருந்தார்
உதித்தஇளஞ் சந்திரனுக் தெரிசிக்க
உடற்களங்கந் தீருமென்று
மதித்தடியி னிற்போற்றி மாயாவ தாரனுக்கு
வாய்த்தவட்ட வெண்குடைபோல்

வச்சிர கலிங்கமெனக் கள்ளழக நாதனுக்கு
வர்ணமணிப் பொற்கவசம்
சந்தமிகு மூன்றுளதாஞ் தனயை பெருஞ்சோம
சந்திரவிமா னந்துலங்க
சோமசுந்தர விமானமதை நங்குகண்ட பிரகாரஞ்
சுற்றியழகா யிருக்கும்
சேமமிகு மாங்கதற்கும் ஸ்ரீ வைகுண்டந்
தென்றிசையில் நின்றிலங்கும்
வாமமிகு மேற்றிசையில் வள்ளல் ஜெகதீசன்
மகாலெக்ஷிமி யுடனே
க்ஷேமமுடன் வீற்றிருந்தார் நீலமேக சுவாமி
நிகழும் வடதிசையில்
அனந்த சயனமதாய்ப் பாற்கடல் வாசன்
அமர்ந்த வலங்காரம்
நினைந்த மணிவண்ணன் இவ்வுல கத்தில்
நிலையாகத் தான்விளங்கும்
சோதிவிமானத் திருக்கும் மிக்கவெளிப் புறத்திற்
றாயமஞ்ச ணைப்பாறை
ஆதிநிலையா யிருக்குந் துவாரபால காள்வாச
லாங்கதற்கு முன்புறமாம்

## கோவில் விசேடம்.

விளங்குமதிற் முன்னே விண்ணோர்க் குபகாரன்
வினியோகப் பாறையுடன்
வளங்குங்க்ஷேத்திர பாலருமே சேர்த்தியுடன் பூவில்
வாழ்ந்திருக்குஞ் சந்நிதியாம்
அங்கதற்கு ஆதி உக்கிர மூர்த்தி
ஆரியவ்வாசற் சிறப்பாம்
பொங்குமதற்கு முன்னே சுந்தர பாண்டியன்
புஷ்பித்த பொற்குடாரம்
காட்டுமதற்கு முன்னே கள்ளழக மூர்த்தி
கருடாழ்வார் சன்னதியாம்
ஆட்டுசேவ ரத்தினத்தால் அழகமலை நாதலுக்கு
ஆறுகாற் பீடமுடன்
கருங்கல்லாற் காற்காலி காயாம்பு மேனிக்குக்
கனைத்த பெலிபீடம்
நெருங்குஞ் சிறைக்கருடன் ஆராவா ரித்து
நிலைத்தவல் தம்பமப்பால்



கைக்கோளன் வாசல் விஸ்வகமகா யக்கர்செய்த
கலியாண மண்டபத்தில்
மிக்கவண்டி வாசல் வேணுகோ பாலனுக்கு
வெகுகீர்த்தி யாய்விளங்க
அண்டம்வரை யூடுருவி யண்டசரா சரத்துக்
கப்பாலுந் தானீண்டு
சண்டபரனைத் தடுத்துக் கோவிலுக்கு முன்பாகத்
தானெழுந்த கோபுரமாம்
ஈரைந்து திக்கினிலுஞ் சுந்தராஜமூர்த்தி
எட்டெழுத்தி ஞானைசெல்ல
ஓரைந்தொழி லியற்றும் உரக சயனன்
உத்தியோகச் சக்கரந்தான்
சங்கரனும் மைத்துனர்க்குத் தண்டுளப மார்பன்
தங்கைமீனாள் தனக்கும்
மங்களங்கள் பொங்க தண்டுளப மார்பன்
வரிசைசெய்யுஞ் சந்நிதியான்
மலரோன் படைப்பையெல்லாம் மாயழகன்
மாற்றியும் பின்னேநடக்க
பலமாம்வரவேண்டி ஆதி பிர்மதேவர்
பணிந்துநிற்குஞ் சந்நிதியான்

## சன்னதி விஷேடம்.

எண்ணுக் கடங்காத ரிஷிகள் முனிவருக்கும்
இந்திரர்க்குந் தேவருக்கும்
கண்ணுக் கடங்காத கள்ளழக மூர்த்தி
காக்ஷிதருஞ் சந்நிதியான்
தொங்கிடதோம் தாமெனவே சுந்தராஜமூர்த்தி
தும்புரரும் நாரதரும்
சங்கீதம் பாடி அரம்பையர்கள்
சதுர்கூட்டுஞ் சந்நிதியான்
சித்தவர்க்கும் பெய்த்தவர்க்கும் செங்கமலக் கண்ணன்
திகழ்சில மூத்தருக்கும்
பத்தருக்கும் வானவர்க்கும் பாரளந்த மாயோன்
பாலிக்குஞ் சந்நிதியான்
எட்டியடி வைக்கவென்னும் பொல்லா
பிருமலட ருங்கனிக்து
தொட்டிலுடன் பிள்ளை சுந்தராஜ மூர்த்திக்குச்
சுமக்கவருஞ் சந்நியான்

பொற்கோட்டை கட்டிவரும்    ஐம்பத் தாறு
பூதலத்து மாந்தர்களும்

நெற்கோட்டை கட்டி    நித நிதமும்
நேர்ந்துவருஞ் சந்நிதியான்

குடங்கட்டுஞ் சந்தனத்தை    வெற்றிலைப் பூசாரி
கொண்டாடி மாதமதில்

திடங்கட்டவே சாத்தும்    பொற்கதவு தானுஞ்
சேர்ந்திருக்குஞ் சந்நிதியான்

பாவலருங்கோவலருந்    தேவருடன் மற்ற
பாருலகிலுள்ளோரும்

காவலருந் தான்கூடி    மிக்க தெரிசனைக்குக்
கார்த்திருக்குஞ் சந்நிதியான்

சங்கங் குமுகுமென    என்னுளுந்
தவுல்பேரிகை முழங்க

துங்கமிகுங் கற்பூரம்    பத்தி பத்தியாகத்
தூபமிடுஞ் சந்நிதியான்

சாம்பிராணி வாசம்    ஜகன்மோகினி ரூபனுக்குச்
சதாகாலமும் மணக்க

காம்புவைத்த கப்பரையில்    கார்மேகவண்ணனுக்குக்
கார்த்திருக்குஞ் சந்நிதியான்

## பதினெட்டு லாடர்கள்

## பதினெட்டாம்படி உண்டான விசேடம்.

பாங்குபதினெட்டாகப்    பதித்திருக்குஞ் செம்பொற்
படிவாசலின் சிறப்பும்

ஓங்கு நவக்கிரகம்    ஓரெட்டொருபடியா
யுற்றிருக்குஞ் சந்நிதியில்

மலையாள தேசம்விட்டுப்    பதினெட்டு லாடர்
வந்துமிக வுங்களிப்பாய்

புலையகன்ற லாடரெல்லாம்    அய்யன்மணி யாலயத்திற்
புதைய லிருக்குமென்று

ஓம்நமோ நாராயணன்    கள்ளழக மூர்த்தி
உக்கரமதைத் தான்பார்த்து

வாமமிகும் உக்கிரமத்தை    சுந்தராஜமூர்த்திக்கு
வாங்கித் திரவியத்தை

எடுத்திடுவோ மென்று    பதினெட்டு லாட
ரெல்லோருந் தான்சேர்ந்து

அடுத்துமந் திரஞ்செபிக்கப்    பதினெட்டு லாடர்களை
ஆதிமூலம் பார்த்து



காரியக் காரிடம்    கள்ளழகமூர்த்தி யிந்தக்
காரணத்தைப் போயுரைத்து

வீரியமா யங்கிருக்கும்    பதினெட்டு லாடரையும்
வெட்டிப் பலியாக்கி

அங்கவற்குக் கைக்கருப்பாய்    வந்த
அடங்காக் கருப்பணனை

பங்கமற லாடர்களைப்    பரமபுருடோத்மன்
பாங்காய் ஸ்தாபித்தபின்பு

பகர்ந்த பதினெட்டாம்    பொற்படியிற் காத்துப்
பரிவா யிருமெனவே

உகந்து வரங்கொடுக்க    பெரிய கருப்பன்
உண்மைநிலை கொண்டிருந்தான்

## புண்ணிய தீர்த்த விஷேடம்.

மாதவர்கள் கொண்டாட    மண்டுக மாமுனிக்கு
வரவழைத்த மாதீர்த்தம்

ஆதவன்வந் தாடுகின்ற    அழகமலை நாதன்
அருவிமலைப் பூந்தீர்த்தம்

விரும்பியதில் மூழ்கில்    வேண்டுங் குழந்தை
மிகக்கொடுக்கு மாதீர்த்தம்

அருங்கலியால் வாடுவோர்க்கு    இக்கலி காலத்தில்
அருள்கொடுக்கு மாதீர்த்தம்

மைந்தனின்றி வாடுகின்றோ    ரிக்கலி காலத்தில்
வாகா யொருபொழுது

விந்தையுடன் போய்மூழ்கில்    சற்புத்திரரை
மென்மேலும் பெற்றெடுத்து

வாழ்வுடனன்னோர்க ளெல்லாம்    இக்கலி காலத்தில்
மாயோ னருள்பெறவும்

கேழ்க்கில் ரசம்பத்தருளி    இக்கலி காலத்தில்
கீர்த்தியருளுந் தீர்த்தம்

## கெருடாழ்வார் தீர்த்த விசேடம்.

கலிதீர்த் தருள்கொடுக்கும்    கருடாழ்வாற் காகக்
கசிந்ததீர்த் தக்கரையும்

வலிவுடைய தேவர்களுந்    தினந்தோறு மங்கே
வந்தாடுமா தீர்த்தம்

அரம்பைய ராடுந்தீர்த்தம்    அகநிலைத் தேவன்
அருவிமலைப் பூந்தீர்த்தம்

வரம்பையிலுமா தீர்த்தம்    மாயாவ தாரன்
    வரவழைத்த நற்தீர்த்தம்
இப்பெரிய தீர்த்தமதில்    ஏகாங்க மாக
    இருடிகளும் சித்தர்களும்
செப்புங் கெருடாழ்வார்    தீர்த்த மதில்
    தினம்வந்து முழ்குவதாற்
கண்ணாலே கண்டாலும்    பூதலத் தோர்
    கையினாற் றொட்டாலும்
என்னாளும் வாழ்வுதரும்    சுந்தராஜ மூர்த்தி
    யிசைந்தழைத்த மாதீர்த்தம்

## அனுமார் தீர்த்த விசேடம்.

தேவர்முனிவர் மெச்சும்    அநுமா னுக்காகத்
    தீர்த்தமுண் டாக்கியதில்
யாவர்களுந் தானேகி    அநுமார் தீர்த்தத்தில்
    அன்புடனே தான்மூழ்கில்
மெண்மேலு முத்திகளை    அப்போதே பெற்று
    விந்தையுடனே யிருப்பார்
நன்னய மாகவேதான்    மேனகை யூர்வசியும்
    நலமுட னூடுந்தீர்த்தம்
வையகத்தி லுள்ளோர்கள்    இத்தீர்த்தந் தன்னில்
    சதிபதியும் தான்மூழ்கில்
வாழ்வுகளு மேபெருகி    மாலருளால் வேண
    மக்களையும் பெற்றெடுத்து
தாழ்வுகுறை யில்லாமல்    மென்மேலுஞ் செல்வந்
    தானபெருகி வாழ்குவர்கள்

## மலைவன விசேடம்.

அழக மலையும்    ஆதிமூலம் பரமசாமி
    அருவிமலைக் கோம்பைகளும்
துளசி வனமும்    சுந்தராஜ மூர்த்திக்குக்
    தும்பிவனக் காவுகளுங்
கோம்பை மலையுங்    கோவிந்த மூர்த்திக்குக்
    கொல்லிமலைக் காவுகளும்
ஆம்பல் படரும்    அருளாழிக் கையன்
    அழகான செங்கைகளும்

Q22:2417
N55
102153
MADRAS



பல்லக்குக் கோம்பைகளும்    பச்சைமா லச்சுதன்
    பஞ்சவடி தீர்த்தங்களும்
முல்லை அருவிகளும்    முகுந்தன் மெத்தையேன்
    முதலருவிக் கோம்பைகளும்
பெரியபலாத் தோப்புகளும்    பிரமன் றனையீன்றோன்
    யேரீச்சம் பண்ணைகளும்
கருணி விளையாடுங்    கார்மேக நாதன்
    கருங்காலிப் பண்ணைகளும்
இருண்ட வனமும்    என்னையன்
    எலுமிச்சம் பண்ணைகளும்
திரண்ட பூங்காவுகளும்    திருமாலழகன்
    தேனருவிக் கோம்பைகளும்
தும்பி கவிபாடுந்    துளப மணிமார்பன்
    சொகுசான மேடைகளும்
தெம்புடனே பட்சிகளுந்    செங்கமலக் கண்ணன்
    தெரிசனைதே டித்திரியும்
செல்வத்திப் பூவனமுஞ்    செங்காழிக் கையன்
    சிறுகிளாப் பண்ணைகளும்
திவ்வியசந்தன மணக்குந்    திருமா லழகன்
    செண்பகப்பூங் காவனமும்

## அழகமலைச் சிறப்பு.

சீர்கொண் டிலங்குமலை    ஜெகன் மோகனரூபன்
    செல்விகா லாட்டுமலை
பார்கொண் டிருக்குமலை    பள்ளிகொண்ட மாயன்
    பதிந்த அழகமலை
நவகோடி சித்தரெல்லாம்    நாராயணனை
    நாடித் துதிக்குமலை
தவநாதர் போற்றுமலை    துருவமகா ராஜனுக்குச்
    சாயுச்யந் தந்தமலை
இருள்விளக்கி நாகரெத்தினம்    இலட்சுமி நாதனுக்கு
    யெங்கும் நிறைந்தமலை
தும்புருவுங் கின்னரருஞ்    சுந்தராஜ மூர்த்தியைத்
    தோத்திரஞ்செய் கின்றமலை
விம்புருடர் பாடுமலை    கேசவ நாராயணன்
    விருஷ்ணுவ தான்மலை

சந்தனமு ளிகளிலும்                மிக்க மணம்வீசக்
    தனித்தேவ தாரமுடன்
சந்தனங்கள் வாழுமலை                நாராயணனை
    நாதாக்கள் போற்றுமலை
வயிற்றுவலிப் பாறைதனில்                மானிடர்க ளெல்லாம்
    வந்துபடுத் திருந்தால்
வயிற்று வலிதானும்                மாயோ னருளால்
    மாயமா யோடிவிடும்
மண்டையிடிப் பாறைதனில்                மண்டைவலி யுள்ளோர்
    வந்துகையால் தொட்டாலும்
அண்டாது நோய்களுந்தான்                ஆதிமூலம்
    அருளினதோர் பாறைகளும்
வாராக்கிணறும்                உலகளந்த மாயோன்
    உறங்காப் புளிமரமும்
தீராப்பிணி பலவும்                தீர்க்கும் மருந்துகளைச்
    சிருஷ்டித் தழகமலை
நாதாக்கள் வாழுமலை                நாராயணன் றனக்கு
    நாகந்தா லாட்டுமலை
வேதா பரவுமலை                முத்து ராக்காயி
    விளங்கும் அழகமலை

## வெள்ளிமலைச் சிறப்பு.

கார்பூத்த புள்ளிமலை                காயாம்பு மேனி
    கனிந்திருக்கும் வெள்ளிமலை
மயில்நடனஞ் செய்திடுமே                வெள்ளிமலைச சாரல்
    மான்கள்வந்து பார்த்திடுமே
குயில்களிசை பாடிடுமே                வெள்ளிமலைச் சாரில்
    கொம்பில்வண்டு தூங்கிடுமே
வேத முழங்குமலை                வேணுகோபாலன்
    வீற்றிருக்கும் வெள்ளிமலை
கீத முழங்குமலை                கிருஷ்ணாவ தாரனைக்
    கின்னரர்கள் போற்றுமலை
அரம்பையர்க ளாடுமலை                அகிலத் தேவன்
    அமர்ந்திருக்கும் வெள்ளிமலை
வரம்பகன்று நீண்டமலை                மாயாவதாரன்
    வாழ்ந்திருக்கும் வெள்ளிமலை



## அருவிமலைச் சிறப்பு.

தீர்த்தஞ் சொரியுமலை                செங்கமலக் கண்ணன்
    திகழும் அருவிமலை
ஆர்த்தசிம்மம் வாழுமலை                அழகமலை நாதன்
    அமர்ந்த அருவிமலை
மாந்தோப் பிருக்குமலை                புதையல்தனைக் காத்து
    வலையன்மகன் வாழுமலை
சாந்தமிருக்கு மலை                சங்குசக்க ராயுதன்
    சாரும் அருவிமலை
பொய்கை யிருக்குமலை                புண்யபுரு டோத்மன்
    பொருந்தும் அருவிமலை
செய்கை யிருந்தமலை                சீதா சமேதன்
    தேனருவி சூழ்ந்தமலை

## கோம்பைமலைச் சிறப்பு.

பறவையிசை பாடுமலை                பச்சைமா லச்சுதன்
    பசுமேய்க்குங் கோம்பைமலை
கறவைவிளை யாடுமலை                கார்மேக வண்ணன்
    கன்றோட்டுங் கோம்பைமலை
மேகந் தவழுமலை                வேணு கோபாலன்
    வேய்ங்குழல்நின் றூதுமலை
மாகம் பொருந்துமலை                மாயாவதாரன்
    மகிழ்ந்துவிளை யாடுமலை
சிலம்பாறு சூழ்ந்தமலை                திருச்சோலை தன்னில்
    திருநடனஞ் செய்யுமலை
தலம்பார்த்து வந்தமலை                தாமோதரப் பெருமான்
    சயனமுற்ற கோம்பைமலை
செல்வி தாலாட்டுமலை                ஸ்ரீதா சமேதனுக்குத்
    தேனாறு சூழ்ந்தமலை
கல்விபா ராட்டுமலை                காயாம்பு மேனி
    கற்பகஞ்சூழ் கோம்பைமலை

## பண்ணைமலைச் சிறப்பு.

கதலி பழுக்குமலை                கருங்கடல் வண்ணன்
    கனிந்திருக்கும் பண்ணைமலை
முதிர்பா லருவிமலை                மோகினி சொரூபன்
    முனிவோர்க் கருளுமலை

வனவேடர் வாழுமலை — மாயா விநோதன்
வாழ்ந்திருக்கும் பண்ணைமலை
சிலையா டுலாவுமலை — செங்காழிக் கையன்
திருக்கருணை பூண்டமலை
அறுயா ரிருக்குமலை — அருளாழி வேந்தன்
ஆழ்வார் துதிக்குமலை
மருமாந்தர் வாழுமலை — வடவாலிலை துயின்றோன்
வரங்கொடுக்கும் பண்ணைமலை
வேங்கை யிருக்குமலை — வேணுகோ பாலன்
வேட்டைசெய்யும் பண்ணைமலை
பாக்குகுள முற்றமலை — பரமபுரு டோத்மன்
பயிர்வளர்க்கும் பண்ணைமலை

## சோலைமலைச் சிறப்பு.

கன்னல் வளருமலை — களபமணி மார்பனுக்குக்
கதலிபலா காய்க்குமலை
செந்நெல் விளையுமலை — சீதாபி ராமனுக்குத்
தேன்கூடு கட்டுமலை
இருடி துதிக்குமலை — இலட்சுமி காதனுக்கு
இளந்தென்றல் வீசுமலை
கார்மேகஞ் சூழ்ந்தமலை — காயாம்பு மேனி
களைப்பாறுஞ் சோலைமலை
சீர்மேவும் புண்யமலை — திருவேங்கட நாதன்
சிந்தைமகிழ் சோலைமலை

## இடபமலைச் சிறப்பு

கொன்றைமலர் மேவுதலால் — மான்க ளோடு
கோளரவம் வாழுதலால்
தென்றமதி சூடுதலால் — ஆன்றதிறைக் கங்கை
விளங்குமுடி பேற்றுதலால்
தவத்தோர் நெருங்குதலால் — ஆதிசிவனைப் போல்
தான்சே ரிடபமலை
நவத்தா துபகுதலால் — நாட்டும்புகழ் படைத்து
நான்குமுகஞ் சேருதலால்
கலைமான் மருவுதலால் — வெற்றி பெருகின்ற
கமலமதில் மேவுதலால்



நிலையாய் விளங்குவதால் — ஆதிபிரம தேவனுக்கு
சேரா மிடபமலை
கங்கையர்க ளாடுமலை — வீணைதனைப் பாடி
நாரதர்கொண் டாடுமலை
சங்கு முழங்குமலை — ஆதிமுனிவர் தொழுஞ்
சதுர்வேதம் போற்றுமலை
புதைய லிருக்குமலை — குகைகள் மிகுந்திருந்து
பொக்கிஷ வீடானமலை
சதவேள்வி செய்யுமலை — சங்குசக்க ராயுதன்
சார்ந்த இடபமலை
வீங்கு குமிழ்தேக்கு — வெற்றிவேர் முற்றும்
விளையு மிடபமலை
தேங்குமஷ்ட லட்சுமியும் — ஒன்றாக வேதான்
சிறந்திடநின் றாடுமலை
இம்மலைகள் தோறும் — எம்பெருமாள் தானும்
இருந்தே யடியவர்க்குச்
செம்மையுடன் வேண்டுவரம் — சீதாபி ராமன்
தீர்க்கமுடன் தந்தமலை

## மண்டூக மாமுனி தீர்த்தம் வரவழைத்தல்.

மண்டூக மாமுனிவர் — வரத வெங்கடேசனுக்கு
வாகா யபிஷேகம்
பண்டு புரிவதற்கு — மண்டூக மாமுனிவர்
பாங்காகக் காசிதனில்
இருந்தசிவ கங்கைதனை — மண்டூக மாமுனிவர்
இன்பமுட னேயழைத்து
பொருந்த வபிஷேகம் — புண்யபுரு டோத்மனுக்குப்
புரிந்த தவப்பயனால்
மூத்த முனிவருக்கு — முசுகுந்தனைக் காத்தோன்
மோட்சங் கொடுப்பதற்காய்
சிந்தைதனிலே நினைந்து — திருமா லழகன்
தென்மதுரை வைகைதனில்
செல்லுதற்கு வேண்டுமென்று — அலங்காரப் பட்டர்
சிறப்பா யகமகிழ்ந்து
சொல்லுதற்குக் கூடாத — மிக்க அருவிமலை
தூயதீர்த்தம் படிந்து
திருமஞ் சனமெடுத்துப் — பரிசாரக் காரர்
சிரசின்மீ திற்சுமந்து

தருமமிகுக் கோவிலிலே பரிசாரக்காரர்
தயவாகக் கொண்டுவந்து
திருமாலிருஞ் சோலை மலையழக மூர்த்தி
திருவடி மீதிற்படிந்து
கருமா முகில்போன்ற கண்ணபிரானுக்குக்
காட்சியுடன் நீர்சொரிந்து
வாசனைத் திரவியங்கள் அலங்காரப் பட்டர்
வாகாகத் தானூட்டி
தேசனைய மேனிதனில் தேவாதி தேவனுக்குத்
திவ்யவா சம்புனைந்து

## அழகர் அலங்காரச் சிறப்பு

அன்பாக மாயனுக்கு அலங்காரப் பட்டர்
அபிஷேகஞ் செய்தபின்பு
முன்பாக மாயனுக்கு முகமிலங்க வேதான்
முடிமேல் மகுடம்வைத்தார்
முப்புரிநூல் மின்ன அலங்காரப் பட்டர்
முகுந்தன் மணிமார்பில்
செப்பமுடன் பூட்டி திருமா லழகனுக்குச்
சிங்காரஞ் செய்தபின்பு
அன்பாய்ச் சுயம்பாகி அகநிலைத்தேவனுக்கு
அலங்காரம் கற்றளிகை
முன்பாகப் பாயசமும் மூவுலகுந் தானளந்தோன்
முன்பு புளி யோதரையும்
சர்க்கரைப் பொங்கல் சகலலோ கேசனுக்குச்
சம்பாவின் தோசையுமாம்
மூக்கியமாய் வைத்து திருமலையாண்டார்
முனிவர்மிகக் கொண்டாடி
ரெங்கராஜப் பட்டர் நீலமேக சுவாமிக்கு
நிவேதனஞ் செய்தபின்பு
தூக்கமுடன் சாம்பிராணித் தூபமொடுதீபக்
துரிதமுடனே கொடுத்து
தடமால் வரையுடையான் சாரங்க பாணியைத்
தான்பணிந்து நிற்பவர்க்கு
சடகோபஞ் சாத்தி தீர்த்தமுடன் துளசி
சாதித்த பிற்பாடு
பந்தனமாய்ச் சூழ்ந்ததையும் பாண்டவர் சகாயன்
பார்த்தே மனமகிழ்ந்து



சந்தனந் தாம்பூலம் அன்பாக அங்கு
சகலருக்குந் தான்கொடுத்து
அய்யன் யெழுந்தானும் அருளாழி வேந்தன்
அண்டரெல்லாங் கொண்டாட
செப்புகின்ற கோவில்தனில் தந்தச் சிவிகை
ஜெகஜோதி யாகநின்று
பேரிகை யெக்காளம் பிரகன்றனை யீன்றோன்
பெரியதவில் மும்முரசு
பூரிகைடங் காமுதலாய் புண்யபுரு டோத்மனுக்குப்
பொங்குபுயல் போல்முழங்க
பட்டுக்குடைகள் முதல் பள்ளிகொண்ட மாயனுக்குப்
பலவிருது முன்சூழ
கட்டுமுயர் பூக்குடைகள் காயாம்பு வண்ணனுக்குக்
கவிழ்ந்துநிழல் செய்துவர
அதிர்வெடியைத் தான்முழக்கி அழகமலை நாதன்முன்னே
அங்குவெகு பேர்முழங்க
முதிர்வேத நாதமென ஆதிமூல மென்றகரி
முன்புவந்த மூர்த்திதனை

## அழகர் மதுரைக்கு எழுந்தருளுதல்.

தேவர்களும் யாவர்களும் இந்த விதமாக
ஜெயஜெயவென் றார்ப்பரிக்க
மூவருக்கு மேலான முராரி ஜெகதீசன்
முகுந்தன் மணிச்சிவிகை
ஆடி வருகுதாம் அப்பன் சிவிகை
அருள்மிகுந்த கோவிலுக்குள்
நாடியதோர் கோவில்விட்டு ஆதி நாராயணன்
நடப்பாய் வரும்போது
தக்க முகுந்தனுக்குக் குடைசுருட்டி தீவெட்டி
சார்ந்தபொக்கி ஷப்பேழை
முக்கிய மாகவேதான் நாட்டார்கள் தானும்
முன்பாகக் கொண்டுவர
சந்திரவிமா னங்கோவில் சாரங்க பாணி
தானே நடந்தெதிரில்
உந்தும் களஞ்சியத்தை உரக சயனன்
உறுதியுட னேகடந்து

அண்டிவாசற் கடந்து — திருமலை நாயக்கர்
மண்டபத்தில் வந்திறங்கி
அண்டர்புகழ் வேதியர்க்கு — அழகமலை நாதன்
யாத்திரைதா னங்கொடுத்து
வாங்குபதி னெட்டாம் — படிவாசல் முன்பாகப்
பச்சைமால் பல்லாக்கு
ஆங்குவந்து நின்று — பெரிய கருப்பணனை
அடைவாகத் தான்பார்த்து

## கருப்பண சுவாமியைக் காவல் வைத்தல்.

வருகுஞ்சித் திரைமாதம் — பெரிய கருப்பா
வாய்த்த பௌர்ணையில்
தருமர் தனைத்தோங்க — பெரிய கருப்பா
தயவாக நாமெழுந்து
மண்டூக மாமுனிக்கு — முத்திதனைக் கொடுத்து
மனுவலற்சுக் காட்சிகல்கி
விண்டுலகோர் கொண்டாட — மதுரை வைகைக்கு
விரைந்துநாம் செல்லுவதால்
கோட்டை பதனம் — பெரிய கருப்பா
கோபுரமுந் தான்பதனம்
நாட்டிகளுஞ் சேர்ந்தோங்கும் — பெரிய கருப்பா சோம
சுந்தரவிமா னம்பதனம்
கருவலமுந் தான்பதனம் — பெரிய கருப்பா
கவின்கோவி லும்பதனம்
மருவற்ற மண்டபமும் — நாச்சியார் கோவில்
மகாகளஞ்சி யம்பதனம்
கண்ணை இமையாமல் — பெரிய கருப்பா
காகம் பறவாமல்
திண்ணமுடன் காவல்செய்வாய் — பெரிய கருப்பா
சென்றுவரு வேனெனவே
மாலையுஞ் சந்தனமும் — பெரிய கருப்பனுக்கு
வாய்ந்தமரி யாதைசெய்து
வேலைதனிற் கண்டுபினும் — வேதாந்த மூர்த்தி
விரைந்துவிட்டார் பல்லாக்கை
தோடியை விட்டுத் — திருமா லழகன்
தெற்குவாசற் கடந்து
வாடியை நோக்கிக் — காட்டுப்பிள்ளை யார்கோவி
லுண்மையுடன் விட்டகன்று



சீர்கொளம்மா மண்டபத்தில் — ஜெகன் மோகனரூபன்
சென்றேயிளைப்பாறி
கார்கொள் காயாம்புவண்ணன் — கருணாகரக் கடவுள்
கடந்துமகிழ் வாகவேதான்
பொய்கைக் கரைப்பட்டி — வைரார்பொதுவில்
புதுமைபெற வேணுமென்று
மெய்யாகக் கட்டிவைத்த — திருக்கண் ணதனில்
விரும்பியங்கு தானிருந்து
யானைபரி முன்னடக்க — அஷ்டதிக்கி லுள்ளோர்
யாவர்களுஞ் சூழ்ந்துவர
சேனைப் பெருக்கமுடன் — கள்ளந்திரி மண்டபத்தில்
சிறப்பாக வீற்றிருந்தார்
செப்பமுடன் அங்கிருந்து — சீதாபி ராமன்
சென்றேயிளைப்பாறி

## அப்பன் திருப்பதியில் இருத்தல்.

அப்பன் திருப்பதிக்கு — ஆதிமகா மூலம்
அன்பாக வந்திருந்து
தெரிசித்த பேர்களுக்கு — தீவினையைப் போக்கி
திருத்துழாய் தானீய்ந்து
பரிசுத்தமாக வேதான் — சுந்தராஜன் பட்டிவந்து
பாலித்தார் பக்தருக்கு
அவ்விடத்திலே சுகமாய் — அழகமலை வாசன்
ஆயாசந் தான்தீர்த்து
செவ்விதிரு மாலழகன் — சுந்தராஜன் பட்டியில்
சிவிகைதனி லேயேறி
வருகிறார் தண்டிகையில் — வராக அவதாரன்
மாவேக மாகவேதான்
சருவ லோகாதிபனும் — பூண்டி மண்டபத்திற்
றுனிருந்தல் லாசமதாய்
மறவர்மண்ட பங்கடந்து — மச்சாவ தாரன்
வருகின்றார் சவ்வாரி
திறமாங் காரைக்கிணற்றில் — கள்ளர் வழிமறிக்கத்
தீர்க்கமுடனே விரட்டி
முத்துமணிப் பல்லாக்கில் — பிச்சனேடைப் பாதை
முகுந்தனுந் தானெழுந்து

அல்தமிக்கு முன்னே வெள்ளை மண்டபத்தில்
அழகனுமே வீற்றிருந்து
வெள்ளை மண்டபத்தை மாயாவ தாரன்
விட்டுவெளி யேறியபின்
வள்ளலுஞ் சந்தோஷமுடன் ஆதிமூலம் பரமசாமி
மகிழ்வாக அப்போது
திகழ்மூனு மாவடியை செங்கமலக் கண்ணன்
சீக்கிரமாகக் கடந்து
புகழ்மஞ்சிக் கூடம்விட்டு புண்யபுரு ஷோத்மன்
பொற்பல்லாக் கேகுதுபார்
மாரியம்மன் கோவில்விட்டு நரசிங்கம் பட்டி
நாட்டார்க் கிசையுடையோன்
ஆரியலு மார்பன் இராமசாமி அம்பலம்
அலங்கார மண்டபத்தில்
நாத விளைப்பாறி மண்டபங்கள் தாண்டி
நாலுகால் மண்டபத்தை
நீதமுடனே கடந்து நீலமேக சுவாமி
நேர்மையுடனே வரவே

## தல்லாகுளத்தில் அழகர் அலங்காரச்சிறப்பு.

சத்தகடல் போலே சங்குசக்க ராயுதன்
தளங்கள்படை சூழ்ந்துவர
சுத்தமுடன் வாத்தியங்கள் சுந்தராஜன் முன்னே
தூயமுகில் போல்முழங்க
வெடியெழுப்புஞ் சத்தம் வேணுகோபாலன் முன்னே
விரைந்துகடற் போற்குமுற
படியேழுங் கொண்டாட பாரளந்த மாயன்
பல்லாக்குச் சோதியின்ன
வளஞ்சேர் தல்லாகுளத்தில் வரதவெங் டேசன்
வாழுமணி யாலயத்தில்
பளபளப்பாய் மின்னும் பதினாறு காலுடைய
பாங்கான மண்டபத்தில்
அன்பாக யிறங்கினர் அழகமலைத் தேவனுக்கு
அண்டர்புஷ்ப மாரிபெய்தார்
முன்பாய் மறையவரும் முராரி முகுந்தனை
முனிவோரும் போற்றிசெய்ய
சூரத்துக் கொண்டையிட்ட சோமனை மேற்சாத்திச்
சொகுசா யிருப்பதற்கு



நேரத்துக் கொவ்வோர் நிறங்கொடுக்க வேதான்
நேர்மையுட னப்போது
விலக்கடங்கா ஆணி முத்தினாலே சமைத்த
மிக்கபட்டுக் குல்லாயை
விலைக்க முடிமீது நீலமேக சுவாமிக்கு
நேயமுடனே சாத்தி
அக்குல்லா மூன்முகப்பில் அழகமலை நாதனுக்கு
அக்கனிக்கு முன்னேவைத்து
தக்கமணி காதிரண்டில் தண்டுளப மார்பனுக்கு
சந்திரனுஞ் சூரியனும்
வந்து கவிந்ததுபோல் மாயாவ தாரனுக்கு
வயிரக் கடுக்கனிட்டு
முத்தியசவ் வாதனால் மோகினி சொரூபனுக்கு
முன்முகத்திற் பொட்டுமிட்டு

## ஆபரண அலங்காரச் சிறப்பு.

சாந்த மரகதத்தால் சங்காழிக் கையனுக்குத்
தான்மேல் முருகுமிட்டு
வார்ந்தமா ணிக்கமதால் மாமுகில் வண்ணனுக்கு
வண்டிக் கடுக்கனிட்டு
வைத்தகனை யாழிதனை மரகதமே னிக்கடவுள்
மணிவிரலின் மேலணிந்து
நத்திய கண்டமதில் நாராயணன் றனக்கு
நான்கவுல்து வம்புனைந்து
பைந்துளப மாலைதனை பாற்கடல் வாசனுக்கு
பரிமளிக்க மார்பிலிட்டு
முத்துப்பவளக் கோர்வை முகில்வண்ண நாதனுக்கு
மோகன மாலையிட்டு
பதைக்கம் பளபளென பள்ளிகொண்ட மாயனுக்குப்
பாங்காகவே புனைந்து
உதிக்குமிளஞ் சந்திரன்போல் உலகளந் தோனுக்கு
உத்தரீயந் தானணிந்து
காதினிற் பொன்னால் வீரகண்டா மணியைக்
களகலென வேசாத்தி
சாலமுள்ள பொற்கொலுசும் சுவாமிக்கு
தண்டையுமன் பாய்ப்பூட்டி
வல்லயமும் கேரிசமும் மாயாவதாரனுக்கு
வாள்வேல் சமுதாடு

அல்லிவென்ற மேனியனும்    அருளாழி வேந்தனுக்கு
அம்புவில்லுந் தானசாத்தி
மல்லிகை முல்லை    மண்ணளந்த பாதனுக்கு
மருவு மிருவாட்சி
சொல்லிய புஷ்பமெல்லாஞ்    சுந்தர ராஜனுக்குத்
தூயமணந் தான்வீச
பூட்டி யலங்கரித்து    புயல்வண்ண நாதனுக்கு
போந்தவலங் காரமிட்டு
மேட்டிமையாய்ப் போற்றியபின்    பட்டர்களு மப்போ
மிகமகிழ்ந்து கொண்டாட
சமையனுஞ் சங்கிலியுந்    தேவலோகத் திருந்து
தான்கொணர்ந்த பாவனைபோல்
இமையோர்கள் தான்துதிக்க    பஞ்சகலி யாணிதனை
இயல்பா யலங்கரித்து

## குதிரை அலங்கார வர்ணிப்பு
## (சந்தம் வேறு.)

முத்தியன் பருக்கருள்வோன்    முகுந்தன் ஜெகதீசன்
மூர்த்தி பரந்தாமன்    மோகினி சொரூபனரி
முராரி குதிரைக்கு    முகமோகல் நீலவர்ணம்
பத்திபெருங் கண்கள்ரெண்டும்    பாண்டவர் சகாயன்
பச்சைமா லச்சுதன்    பரமசிவன் மைத்துனன்
பாரளந்தோன் குதிரைக்குப்    பச்சைமணி வர்ணநிறம்
கான்றமணிச் செவிகள்    காராழி வண்ணன்
கமலா சனிக்கணவன்    காகுத்தன் மேகநிறம்
கண்ணன் குதிரைக்கு    கனிந்தநீ லோற்பலமாம்
போன்ற அடிவயறு    புண்யபுரு டோத்மனுக்கு
புலமூன றெரித்தோன்    புயங்க சயனத்தான்
புனிதன் குதிரைக்கு    புஷ்ப ராகத்தின் நிறம்
முத்தமிழும் போற்றிசெய்யும்    மோகினி சொரூபன்
முருகனுக்கு மாமன்    முனிவோர்க் கருள் தருவோன்
மூர்த்தி குதிரைக்கு    முதுகோதான் செம்மை நிறம்
சத்தகன்னியர் துதிக்குஞ்    சாரங்கபாணி நண்பன்
தாமோத ரானந்தஞ்    சங்காரவீரன் சங்குசக்கராயுதன்
சாமி குதிரைக்கு    சரீரஞ் சுவேதநிறம்
வாயோ பவளநிறம்    வாழ்கருட வாகனத்தான்
வானோர்க் குபகாரன்    வஞ்சற் கனுகாதான்
வள்ளல் குதிரைக்கு    வால்நுனிசெம் பஞ்சவர்ணம்



தூயதொடை நான்குந்    துளயமணி மார்பன்
சோலைமலை நாதன்    சூரர்குலகாதன் சுந்தராஜமூர்த்தி
சுவாமி குதிரைக்கு    சோதிப் பவளவர்ணம்
இகந்துதிக்குங் காற்குளம்பும்    எனையாண்ட நாதன்
இமையோர்க் கருள்தருவோன்    இரண்ய சம்மாரன்
எந்தை குதிரைக்கு    இளரியபசும் பொன்னிறமாம்
மகந்துதிக்கு நாதன்    மாயாவ தாரன்
மரகதமே னிக்கடவுள்    வள்ளல் ஜெகதீசன்
மாயோன் குதிரைக்கு    வதனந் தலைநாசி
துங்கதிருமார்பன்    தூயஅன்பர் நேயன்
சுவாமி மலையழகன்    சுந்தராஜப் பெருமாள்
சுவாமி குதிரைக்கு    தோன்றுமிந்த நான்கிடமும்
புங்கவல் லிரண்டுசுழி    புண்யபுரு டோத்மன்
பூவுலகைத் தானளந்தோன்    புராரிமகிழ் மைத்துனன்
பூமான் குதிரைக்கு    பொருந்துமே நெற்றிநடு
செவ்வியுள்ள பின்பக்கம்    ஜெயராகவன் முகுந்தன்
திருமா லரிகேசன்    திவ்யமங்கள ரூபன்
தேவன் குதிரைக்குச்    செப்புமிந்த ரெண்டிடமும்
ஒப்புகின்ற வோர்சுழியும்    உமையாள் சகோதரன்
உம்பர்பெரு மான்திருமான்    உலகந்தனை யளந்தோன்
உத்தமன் குதிரைக்கு    உண்மையுட னேதுலங்க
முதுகுக் கலங்காரம்    முளரிமலர் பிரமனுக்கு
முன்னாள் மறையுரைத்தோன்    முசுகுந்தனைக் காத்தோன்
மூர்த்தி குதிரைக்கு    மொழிந்தபல நூல்களதாம்
புதியகிண்கிணிச் சிலம்பும்    பூரணதி யாகரன்
பூமிதனைக் காப்போன்    புண்ணிய குணாகரன்
புனிதன் குதிரைக்குப்    போந்தபல மந்திரமாம்
ஆதவனுஞ் சந்திரனும்    ஆதிமூல நாதன்
அகில ஜெகதீசன்    ஆலிலைமேற் றுயின்றோன்
ஐயன் குதிரைக்கு    அங்கவடிவாய் விளங்க
மாதவ ராகப்புஷ்ப    மந்திரங் கடிவாளம்
மாமறைகள் போற்றும்    மாயோ னுபாயன்
வள்ளல் குதிரைக்கு    மாருத சீனியதாம்
தத்துவங்களெல்லாந்    தந்திதனைக் காத்தோன்
தாமோதரப் பெருமான்    சாரங்க பாணி
சாமி குதிரைக்குத்    தான்விளங்கும் ரத்னகுஞ்சம்

அத்துவித மானோன் அகிலாண்ட நாதன்
ஆதிமகா மூலம் அண்டினோரைக் காப்போன்
ஆயன் குதிரைக்கு அலங்காரஞ் செய்திடவே
பஞ்சகலி யாணிதனைப் பாளக்த மாயன்
பச்சைமுகில் வண்ணன் பஞ்சவர்க் கனுகூலன்
பரமன் குதிரையைப் பார்த்தே மனமகிழ்ந்து
வஞ்சவர்க் கனுகாதான் மாயாவ தாரன்
வடவாவிலே துயின்றோன் வரதவெங் கடேசன்
மனமகிழத் தானும் வையணவவே தப்பரிமேல்
மலர்பாதம் வைக்குமுன்னே மாவேக மாக
மாதவ வேதாந்தபரன் மாதேவகி மைந்தன்
மாயோன் குதிரை மாயூரகெதி காட்டிடுமாம்
இலங்கு பரந்தாமன் ஏழைகளைக் காப்போன்
இமையோர்க் கனுகூலன் இடபமலைவாசன்
எந்தை குதிரை இடபகதி செய்துநிற்கும்
மாயாவதார னெங்கோன் வாழ்விஜயனுக்கு முன்னோன்
மைத்துனனுகச் சிறந்து வன்பா ரதமுடித்த
வள்ளல்மணிக குதிரை வானரவேகங் காட்டும்
காயாத பாலுண்டோன் கண்ணன் மணிவண்ணன்
கஞ்சன் றனைவதைத்தோன் காகுத்தன் றன்குதிரை
கலிந்து மல்லர் போல் நடக்கும்
வீராதி வீரனரி வேதாந்த வேதன்
விமல புருடோத்மன் விண்ணோர்க் கனுகூலன்
விமலன் குதிரைவரி வேங்கைதனைப் போல்நடக்கும்
திசைகளெல்லாங் கொண்டாட திருமாலிருஞ் சோலை
சீதாபி ராமன் தேவர் புருடோத்மன்
திருமால் குதிரை திருநடன மாடிவர
இசைகொள்பிர மாண்டமெல்லாம் இந்திராதி தேவன்
எனையாண்ட போதன் இலக்குமிக்கு நாதன்
எந்தை குதிரை இணைமுதுகின் மீதேற

(சந்தம் வேறு.)

தேவர்களுங் கொண்டாட திருமாலழகனை
ஜெயவேந்தர் போற்றிசெய்ய
மூவர்களுங் கொண்டாட முராரி முகுந்தனை
முனிவோ ரடிவணங்க
கற்பூர வாசனென்று கார்மேக வண்ணனுக்குக்
கற்பூரம் நின்றிலங்க



பொற்புறுஞ் சாம்பிராணி பூமியளந் தோனுக்கும்
புகைமண்டி யேமணக்க
ஆலவட்டஞ் சாமறைகள் அழகமலை நாதனுக்கு
அங்கெதிரே தோன்றிவர
சாளவட்டங் கொண்டாட தாமோதரனுக்குச்
சாமறைகள் தான்வீச
முத்துக்குடையும் மோகினி சொரூபனுக்கு
முழுநீலப் பொற்குடையும்
வெத்திக் குடைசூழ வேணு கோபாலனுக்கு
வெண்குடைகள் தான்பரவ
கருட்டி யொருகோடி சுந்தராஜ மூர்த்தியைச்
சுற்றியே சூழ்ந்துவர
கருடக்கொடி பறக்க அனுமக்கொடியும்
காந்திவெகு டால்துலங்க
நாதசுரம் பேரிகையும் நாராயணன் றனக்கு
நகரிடங்கா மும்முரச
பாகமுடனே முழங்க பாற்கடல் வாசனுக்குப்
பலவாத்தியந் தொனிக்க

## அழகர் குதிரை வாகனத்தில் வருகுதல்.

திருபாகக் காரரெல்லாம் நீலமேகசுவாமி முன்னே
நிலமையுடனே நடக்க
தருபாரதி காரிகளும் கள்ளழகர் தேவஸ்
தானமூற்ற சேவகரும்
சுகிர்துவரவே யுலகில் காராழி வண்ணன்
காணிக்கைக் கொப்பரையும்
குவிந்துகொண்டு மேவரவே கோவிந்த மூர்த்தி
கோவிலை விட்டேகுதிரை
வருகுதாங் தன்னக்குட்டிக் கோனு ருடைய
மண்டபத்தைத் தான்கடந்து
திருக்கணை மண்டபத்தில் யாவருக்குஞ்
சேவைதந்து காட்சிகல்கி
அசைந்து வருகுதங்கே அழகமலை நாதன்
அழகுமணிக் குதிரை
இசைந்திடும் தைமாதம் எங்கள் சுந்தராஜனுக்கு
இகம்பூர்வ பக்ஷமதில்
சாமிதிருமால் முகுந்தன் றன்னுடைய
சப்பரத்துக்கே முகூர்த்தம்

நேமமுடன் வைத்து வரதவெங்கடேசன்
நேமியுட கோவில்தனில்
அழகர் தேவஸ்தானம் முப்பத்தி ரெண்டு
அணிநிருபக் காரர்களும்
புகழுடனே சூழ்மதுரை தேவஸ் தானத்திற்
போந்தவழி காரிகளும்
அன்பான சப்பரத்துக் கண்ணூசிக் கொத்தனுட
அலங்காரக் கொத்தனுமே
தென்பாக வேயிருந்து வேலாயுதக் கொத்தன்
சிர்சித்திரக் கொத்தனுடன்

## சப்பரத் தலங்காரச் சிறப்பு.

முன்னிலையாய்ச் செய்ய முறையா யளவெடுத்து
முகூர்த்தமது தான்புரிந்து
மன்னும்வெற்றி வேரதனுல் சப்பரமுஞ் செய்து
வைத்திருந்தா ரோக்கியமாய்
சித்திரை மாதம் பூர்வபக்ஷ மதனில்
சிறந்திடுமே காதசியில்
சத்திபெரு மாயிரம்பொன் சப்பரஞ் சோடிக்கத்
தானேமுகூர்த்த மிட்டு
குத்துக் காலோடுங் குளிசக்கால் வாங்குசட்டங்
கூறுபல சட்டமதால்
சித்திரமாய்க் கோர்த்து சாலைப்பட் டரையுடனே
சிர்விருத்தப் பட்டரையும்
கருணக்காலுஞ் சமைத்து ஓரேழு அடி
கனகமய மாய்முடித்து
வருண விருத்தக்குறடும் பரவாக தேவன்
மகிழ்ந்தவதா ரங்கள்பத்தும்
கோலமுடனே நிறைத்து ஆதிகரு டாழ்வார்
கும்பிட்ட பாவனையாய்
சிலமதாகச் சமைத்து குத்துக்கால் தோறுஞ்
சிங்கங்கள் யாளிமுதல்
பலவுருக்களும் புனைந்து ஆயிரம்பொன் சப்பரத்திற்
பஞ்சரா காசிவைத்து
நலமாக முன்புரத்திற் பஞ்சவர்ணக் குறடு
காட்டியதின் மேலாகச்
சித்திர வர்ணக்காலும் பத்திரவேலிக் காலும்
சிரடுக்கு நெற்றியுடன்



கத்திகைக் கமான்களும்வைத்து கடுநாயக மான
கவின்கொடுங்கைப் பக்கமதில்
வளங்குராச்சி யாரிருவர் விமானமுடன் அபி
வியன்மத் தியமதனில்
வளங்குகரணக்கூடுஞ் சாலைகலோடே யமைத்து
வாய்ந்தமணிச் சாலைவைத்து
தலையலங்கா ரங்கள்செய்து தாக்கக நாசித்
தலையாக வேசமைத்து
நிலைகொள் பாவாடைமுதல் கெந்தருவ ரோடு
நீள்தேவ தைகளுந்தான்
சோடித்துக் கெந்தருவர் நாரதருமற்ற
தோரா முனிவரையும்
நீடித் தலங்கரித்துப் பஞ்சவர்ண மாலை
நிகழ்பச்சை யசுவமுதல்
யாளிசிங்கம் வைத்து சித்ரவர்ணப் பாய்கள்
அழகா யலங்கரித்து
மீளி யனுமார்களுடன் எடுத்தாடு பூதம்
எழில்சித்தி ரப்பதுமை

## அழகர் சப்பரத்தில் வருகுதல்.

எல்லா மலங்கரித்தார் எம்பெருமான் மேகவர்ணர்
இலங்குநவ ரத்தினத்தால்
பல்லார் புகழ்ந்தேற்றப் பாற்கடல் வாசனுக்குப்
பாங்காகச் சப்பரத்தை
ஆதித்தன் மண்டலம்போல் ஆதிநாராயணனுக்
கங்கே யலங்கரித்தார்
சாதித்த மூவுலகும் ஜெகன் மோகனரூபன்
சப்பரங்கள் ஜோதிமின்ன
வெட்டிவேர்ச் சப்பரத்தில் வேதப் பிராமணர்கள்
மேன்மையொடு பூசைசெய்ய
கட்டழகனை கமலா சனிக்கணவன்
கருணையுட னேயெழுந்து
தங்கக் குதிரையுடன் தாமோதரப் பெருமான்
சப்பரத்தி லேநுழைந்து
எங்கும் புகழ்ந்தேற்ற சப்பரத் தடியான்
இயல்பான சன்னதிமுன்
ஆயிரம்பொன் சப்பரத்தில் ஆதிமூல நாதன்
அன்பாக வந்துநின்று

நேயமுடனே மகிழ்ந்து சப்பரத் தடியானுக்கு
நேர்மையுட னப்போது

பரிவட்டஞ் சூட்டிக் கருப்பணனைப்
பார்த்த வுடனே தான்

பரிவட்ட மிட்டுவரப் பச்சைமா லச்சுதன்
பாங்காக நிற்கையிலே

அலங்காரக் கொத்தனுக்குப் பரமசாமிப் பட்டர்
அன்பாகத் தான் மகிழ்ந்து

துலங்கு பரிவட்டம் அலங்காரக் கொத்தனுக்குச்
சூட்டியபின் எம்பெருமான்

கோமா னெழுந்திடவே குவலயத் தோரும்
கொண்டாடி நின்றிறைஞ்ச

மாமரங்கம் போல்முழங்க மாயாவ தாரனுக்கு
மலர்மாரி தான்பொழிய

## சப்பரத்தடியான் கோவிலைவிட்டு வருகுதல்.

மானிடர்கள் கொண்டாட காணூறு சீர்பாதம்
வாய்ப்பாய்ரோ மஞ்சிலிர்ப்ப

கானிலகுக் தோள்குலுக்கிச் சன்னதம் வந்தாற்போற்
கனிந்தே குலவையிட்டு

தூக்கினர் சப்பரத்தை சுந்தராஜன் சப்பரந்
தோளைவிட்டுத் தாண்டுதங்கே

தும்கமணிச் சப்பரமும் எம்பெரு மானுக்கு
எத்திசையுஞ் சோதிமின்ன

தங்கமகா மேரு சங்குசக்க ராயுதனுக்குச்
சப்பரமாய் வந்ததுபோல்

அங்குயினித் தான்வரவே அழகர் குதிரை
யாடுதாஞ் சப்பரத்தில்

வருடஅநு மக்கொடியும் மாயாவ தாரனுக்கு
வாகாக முன் துலங்க

கருடக் கொடிபறக்க கள்ளழக மூர்த்திக்குக்
கட்டியங்கள் கூறிவர

சடகோபங் கொண்டுசெல்ல சாமிதுளசி தீர்த்தம்
சாதிப்போர் முன்சூழ

கடகரிகள் மும்முரசு கருங்கடல் வண்ணனுக்குக்
காராழி போல்முழங்க

வருகுதாஞ் சப்பரம் மாயாவ தாரனுக்கு
மகாமேரு வந்ததுபோல்



விருதுக் கொடி துலங்க வெற்றிவேர்ச் சப்பரம்
விந்தையாய்க் கொண்டுவர

குப்பல்குப்ப லாய்நிதியும் கோதண்ட பாணிக்குக்
கொண்டுசில ருண்டியலில்

செப்பமுட னேசொரிய செங்கமலக் கண்ணனுக்குச்
சேர்ந்திடுநெற் கோட்டைதனை

அங்குசிலர் கொண்டுவர ஆதிமகா மூலம்
ஆயிரம்பொன் சப்பரத்தில்

துங்கமிகு மாலழகர் தாரகமதிலேறித்
துருசாக வேயெழுந்து

## அழகர் திருக்கண் சென்றிருந்து வருகுதல்.

தக்கதிரு மங்கலத்தைச் சார்ந்தகிழவநெறி
தன்னில்வளர் பூமானும்

முக்கியவேள் ளையக்கவுண்டர் புதுவீட்டுக் காரரென்று
மூழங்குஞ்சுப்பை யாக்கவுண்டர்

மக்களமாய்ப் பெற்றெடுத்த வெங்கடாசலக் கவுண்டர்
மகிழ்வாகக் கட்டிவைத்த

பொங்கமுள்ள மண்டபத்தில் திரிக்காரர் கொண்டாடப்
போயிருந்து பின்னரங்கே

தேங்காய் பழங்களுடன் நெய் வேத்தியமும்
செய்து முடித்தபின்பு

பாங்காக வப்போது பரிவட்டங் கட்டிப்
பண்பாகவே யெழுந்து

திருக்கண்கள் தோறும் தேங்காய் பழங்களுடன்
செய்தநெய் வேத்தியமும்

அருமை யுடன்பெற்று ஆங்காங்கு சென்று
அன்பா யெழுந்தருளி

சகலவழக் குந்தீர்க்கும் மதுரை இராமாயணச்
சாவடியைச் சேர்ந்தவர்கள்

மிகஅருமையாக யாதவர்களு மகிழ்வாய்
வேண்டியே கட்டிவைத்த

மண்டபத்தில் வந்திருந்து மாயாவ தாரன்
மகிழ்ச்சி யடைந்திடவே

அண்டரெல்லாங் கொண்டாட என்னய்யன்
அப்போ தகமகிழ

சர்க்கரைப்பொங்கல் நெய்வேத்தியஞ் செய்தபின்பு
சந்தோஷ மாகவேதான்

முக்கிய பரிவட்டம் — அழகாகக் கட்டி
முகுந்தனுமே தானெழுந்து
இருபாரிசமும் — பக்த ஜனங்கள்
இயற்றதிருக் கண்களுக்குக்
கருமா முகில்போலே — கருத்தின்படியே
காட்சிகொடுத் தேபுகுந்து
அண்டங் கிடுகிடென — அழகருடன் முன்னே
அதிர்வெடிகள் தான்முழங்க
மண்டல மெல்லாங்குமுற — மாட்டின்மேல் டங்கா
மழைமேகம் போல்முழங்க
நாடிவரு கிறதாம் — வைகைதனை நோக்கி
நலமாகக் காலையினில்
ஆடிவரு கிறதாம் — பௌர்ணமி யன்று
அழகாக ஆற்றினிலே
பத்தர்களுங் கொண்டாட — தட்டிப் பந்தல்தனிற்
பண்பாய்க் குதிரையுடன்
முத்திக்கு வித்தாய் — அழகமலை நாதன்
முன்புவந்து நிற்கையிலே

## அழகர் வைகைக்கு வந்தபின்
## ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாள் மாலை சாத்துதல்.

நன்னய மாகியதோர் — ஸ்ரீ வில்லிப்புத் தூரில்வளர்
நாச்சியா ரம்மனுந்தான்
மன்னூர்க் குகந்தவளாஞ் — சூடிக் கொடுத்தாள்
மாலைதனைக் கொண்டுவந்து
போட்டார்கள் மாலைதனைப் — புண்ணியபுரு டோத்மன்
புந்திமகிழ்ந் தேயிருந்தார்
நாட்டிலுள்ள மகாஜனங்கள் — முறையோடுங் கூடி
நாரணனைத் தான்பணிந்தார்

## வேறு சந்தம்.

வீரராகவப் பெருமான் — கருடன்மிசை வந்திருந்து
வேதவேதாந்த னென்னும் — மேகவண்ணனைப் பரவ
தீரமுட னங்கவர்க்குத் — திருமாலை பரிவட்டம்
திறமாக வேகொடுத்து — செந்திருமால் சப்பரத்தில்
ஏறித் திருக்கண்கள் — இரணிய சம்மாரன்
இமையோர்க் குபகாரன் — எய்தியங்கங் குள்ளவர்க்கு
மீறியநற் காட்சிதந்து — விநோதகா தாந்தபரன்
மேதினியைத் தானளந்தோன் — மேன்மையுட னேநடக்க



தோற்பையில் நீர்முகந்து — துளபமணி மார்பன்
சோதிக்கு முன்பாய்ச் — சொரிந்தடியார் பின்சூழ
ஏர்க்கும் பிரார்த்தனையால் — முடியின் மயிர்களைந்து
இசைந்தகா ணிக்கையிட்டு — எல்லவருங் கொண்டாட
திரியெடுத் தோர்கள்சிலர் — சேகண்டி தப்பு
திறமான தீவட்டிகள் — சீராக முன்புவர
புரியெடுத்த சாட்டைகொண்டு — சன்னதம்வந் தோருடலம்
பூரித்தடிக்கும் — போந்துங் தொனிமுழங்க
சாமரங்கள் வீச — சாரங்க பாணிமுன்பு
ஜனங்கள்பார்த் தார்ப்பரிக்க — சந்தோஷமாக வேதான்
வாமக் கருடனுடன் — இருகையுந் தூக்கி
வந்தபரு வதம்போல் — மாருதி முன்புசெல்ல
அப்பன் குதிரை — ஆயிரம்பொன் சப்பரத்தே
டங்கே யுள்ள — அழகுதிருக் கண்ணதனில்
செப்பமுடனே புகுந்து — செல்விதனை மார்பில்வைத்தோன்
ஜெயராகவன் முகுந்தன் — தீர்க்கமுடன் காட்சிநல்கி
இங்கிதமாய் நடந்து — சீமான் ராமாராயர்
இலங்குமணி மண்டபத்தில் — இறங்கிவிடா யாறியபின்
தங்கமயமாய்த் துலங்கும் — சப்பரத்திலே நுழைந்து
சர்வலோ காதிபன் — சார்பிலுற்ற மண்டபங்கள்

## திருமாலழகன் வண்டியூர் செல்லுதல்.
## சந்தம் வேறு.

எல்லாங் கடந்து — எங்கள் சுந்தரராஜன்
ஏகிவண்டி யூர்புகுந்து
வல்லார் புகழுஞ் — சாமிக்கவுண்டர் செய்த
மண்டபத்தி லேயிறங்கி
வெட்டிவேர்ச் சப்பரமும் — ஆயிரம்பொன் னாலே
மிகச்சமைத்த சப்பரமும்
கெட்டியுள்ள வான்பரியும் — அவ்விடத்திலே யிறங்கிக்
கேசவ னங்கேயிருந்து
இளைப்பாறி பொன்னுசங்கர் — மண்டபத்தில் மாயன்
இறங்கியே காட்சிநல்கி
விளைப்புநெல் சூழ்ந்திருக்கும் — வண்டியூர் தன்னில்
விளங்குகோ பாலர்புகழ்
அலங்கார மண்டபத்தில் — அழகமலை நாதன்
அழகாக வேபுகுந்து
துலங்கும்நெய் வேத்தியமும் — சுந்தரராஜ மூர்த்தி
தோற்றமுட னேபுரிய

பேர்மண்டபங் கடந்து திருவேங்கட னென்னும்
பெருமாள் கோவிற்புகுந்து
பார்மண்ட லம்புகழ பாற்கடல் வாசன்
பாங்காய் விடாயாறி
சீர்சந்தனக் குழம்பால் சீதாபி ராமனுக்குத்
தேகமெல்லாந் தான்சாத்தி
பேரிந்திரன் புகழ சயித்தியோப சாரம்
பிரபலமாய்த் தான்புரிந்து
வாகுபெருஞ் சேஷ வாகனத்தில் மாயவனை
வாகா யலங்கரித்து
கோகுலர்மால் மேருவைப்போல் புருடோத்தம நாபன்
புறப்பட்டார் வாகனத்தில்
தேவதுந்துமி முழங்க ஜெகன்மோ கனரூபன்
சிறப்பாக அப்போது
காவலர்கள் கொண்டாட கதிரோன் கிழக்கு
கடல்முகட்டி லேயுதிக்க
மண்டூக மாமுனிக்கு மாயழக மூர்த்தி
வரங்கொடுக்க வேணுமென்று

## மண்டூக மாமுனிவர்க்கு முத்திகொடுத்தது.

விண்ணவருங் கொண்டாட தேனூறு மண்டபத்தில்
விமலனுந் தான்புகுந்து
தவத்தா லுயர்ந்தோங்கும் மண்டூக மாமுனிக்குச்
சாந்தமுத்தி யுங்கொடுத்து
நவநீத சோரனென நாரா யணனை
நான்மறையுங் கொண்டாட
வன்கருட வாகனத்திற் மனமோகன ரூபன்
வாகா யெழுந்தருளி
நன்மை யலங்காரம் நரசிம்ம மூர்த்திக்கு
நாட்டமுட னேபுரிந்து
தூபதீபங்க ளுடன் துளபமணி மார்பனுக்குச்
சொல்லும் நெய்வேத்தியமும்
சோபமறச் செய்து சுந்தராஜப் பெருமான்
தொழுவோர்க் கருள்புரிந்து
கெருடன்மணி முதுகில் கள்ளழக மூர்த்தி
காலமுகில் போலெழுந்தார்
விருதுபல முன்னடக்க வேணுகோ பாலனுக்கு
மேளமொரு பால்முழங்க



அதிர்வெடி டமீரெனவே அழக மலையானை
அண்டரெல்லாங் கொண்டாட
சதிரா யிடையிலுள்ள மண்டபங்க ளெல்லாம்
தானேபோய் காட்சிநல்கி

## இராமாராயர் மண்டபத்தில் சுவாமி வந்தது.

ஆதியில் ராமாராயர் கட்டியலங் கரித்த
ஐம்பொன்மணி மண்டபத்தில்
வந்திறங்கிக் கொண்டாடி மாயழகனங்கே
மகிழ்வாய் விடாயாறி
சோதிரெகுராமன் சுந்தராஜ மூர்த்தி
சொற்கருட வாகனத்தில்
விந்தையுள்ள மண்டபத்தில் வேதாந்த மூர்த்தி
வீற்றிருக்கு மந்நாளில்
பரிசாரக் காரர் வேணுகோ பாலனுக்குப்
பக்குவம்நெய் வேத்தியமெல்லாம்
சரியாகத் தான்புரிந்து சங்குசக்க ராயுதன்
சார்ந்தமணி மண்டபத்தில்
வெற்றியுடனே மகிழ்ந்து விண்ணோர்க் குபகாரன்
வியப்பாக முன்பெடுத்த
உற்றவதா ரங்கள்பத்தும் தேவாதி தேவன்
உண்மையுட னேகாட்ட

## மச்சாவ தாரம்.

(சந்தம் வேறு.)

வேதந்தனைத் திருடி வெஞ்சோமுகா சூரன்
வியந்தா ழியிலொலிக்க மிக்கதொரு பிர்மாவும்
சீதமுடன் வானவரும் நெடுமா லிடத்தில்
நிகழ்த்திடவே கேட்டு நேர்மையுட னப்போது
மச்சவடி வெடுத்து வரத வெங்கடேசன்
வாருதியிற் றான்புகுந்து மகிழ்வாக வேதானும்
அச்சமிலா தங்கிருந்த சோமுகா சூரனுடன்
அடைவாகப் போர்புரிந்து அவனிடத்திலே யிருந்த
வேதந்தனைக் கொணர்ந்து வேதனுக்குத் தான்கொடுத்து
மிக்கஅவதா ரங்காட்டி மெய்மகிழ்ந்த பிற்பாடு
யோதமுடன் வானவரும் புகழாக வாருதியில்
புந்திமகிழ்ந் தமுதம் பூரித்துக் கடையிலே

## கூர்ம அவதாரம்.

அண்டர்க் குபகாரன் ஆமைவடி வெடுத்து
ஆழிதனிற் றன்புகுந்து அழுந்தாமல் மாமலையை
கொண்டல் முதுகிற்சுமந்து கோவிந்த நாதன்
கூர்மாவதா ரங்காட்டிக் கோலா கலமாக
வந்தோ ரதிசயிக்க மாயாவ தாரன்
மறைபோற்றும் வீரன் வரத வெங்கடேசனுக்கு
சந்தோஷமாக நெய்வேத்தி யங்கள்
சாம்பிராணித் தூபமிட்டு சகலருமே தான்துதித்தார்

## வராக அவதாரம்.

தேவர்களுக் கிடுக்கம் செய்பிரணி யாக்கதனும்
திக்குள்ளோர் காணாமல் சிறப்பாக வேயெழுந்து
யாவருக்கு மஞ்சா வலவெளிக்கத் தேவர்களும்
அடைவாகப் பார்த்து அழகனிடஞ் சொல்லிடவே
பன்றியுரு வெடுத்து பாரளந்த மாயோன்
பாதாளத்துள் நுழைந்து பாய்ந்திரணி யாக்கனுடன்
நின்று சமராடி நெடுமா லுமப்போது
நேர்மையுடனே நேராகத்தான் செயித்து
வடிவெடுத்துக் காட்டி வந்தோர் மனமகிழ
மாயாவ தாரன் மனமகிழ்வு கொண்டபின்பு
யடியேழுங் கொண்டாட இரணியா சூரனைப்
பங்கமது செய்யப் பாரளந்தா னெண்ணிடவே

## நரசிம்ம அவதாரம்.

ஆதிகிரேதா யுகத்தில் ஆயிரத்தெட்டண்டம்
அதிகாரஞ் செய்ய அவ்விரணியா சூரன்
வேதனைகள் செய்து விண்ணோர் முதலான
மேதினியோர் தம்மை மிகவே வருத்தவைத்து
அரியென்ற மந்திரத்தை அன்பா யுரையாமல்
அகிலமெல்லாந் தன்பெயரை ஆதரவாய்த் தான்பதிந்து
விரிவா யிரணியனும் மிக்கொடு ரங்கள்செய்ய
வெம்பிமன துடைந்த விண்ணவருங் கண்ணனிடம்
சொல்ல வெழுந்து சோலைமலை நாதா
சுந்தரா யெங்களுக்குத் துணைசெய்ய வேணுமென்று
வல்லபமாய்த் தேவரெல்லாம் மாயாவ தாரன்
மரகத மேனிக்கடவுள் மலரடியி னிற்பணிய



பேரிரணியோன் றனக்குப் பிரகலாததேவன்
பிள்ளையென வந்துதிக்க மேற்றிமையதாய் வளர்த்து
சூரியன்றன் பள்ளிமைக்குச் சக்கிராச் சாரியிடந்
தோற்றமுடனே கொடுக்கச் சுதனையருகே யழைத்து
ஏய்ந்த சுபதினத்தில் இரணிய நமாவெனவே
யியம்பு வெனப்பாலன் இதுபாவம் பாவமென்று
வாய்ந்தரிகமா வெனவே மைந்தனித மாயுரைக்க
வல்லிரணியன் சினந்து மைந்தன் றனைவருத்தி
ஏண்டா சிறுவாநீ யியம்பு மரிகேசன்
எவ்விடத்திற் றானிருப்பான் எந்தனுக்குக் கூறுமென்று
வாடாவென வழைக்க மைந்தன் பதறி
மானத பூஜையதாய் மாதவனைப் போற்றிசெய்து
தூணிலுந் துரும்பிலுமித் தொல்லுலகெல்லாம் நிறைந்த
துளபமணி மார்பன் சூழ்ந்திருப்பா னென்றுரைத்தான்
தூணிற் சினந்து சூரனிரண்யன் புடைக்கத்
தூணைப் பிளந்ததனிற் சோலைமலை யழகன்
நரசிங்க ரூபமதாய் நாடியகற் றூணில்
நடுவே பிளந்தெழுந்து நான்மாலைக் காலமதில்
உரதுங்க கூர்நகத்தால் உயரிரணி யாசூரன்
உடலையுமே தான்பிளந்து உதிரங் குடித்ததின்பின்
பக்தபிரக லாதனுக்குப் பட்டமுங் கட்டிப்
பண்ணவரைத் தற்காத்துப் பாற்கடல் வாசனுக்கு
ஜெகமுழுதுங் கொண்டாட தேவாதி தேவன்
சீதா சமேதன் செய்யவதா ரங்காட்டி

## வாமன அவதாரம்.

மாயழகன் றானும் வாமன அவதாரம்
மாதவ கோவிந்தன் வடிவமெடுத் தப்போது
நேயமுடன் மாவலியின் கெர்வமதை யடக்க
நெடுமாலு மேநினைத்து நிந்தனைகள் வாராமல்
மாவலி முன்சென்று மூவடி மண்கேட்டு
வாகாயிரண் டடியாய் வாய்ப்பாக வேயளந்து
தாவியவன் சென்னிதனில் ஓரடியை வைத்துத்
தள்ளிப்பா தாளமதிற் றான்செய் யவதாரம்
காட்டிய பின்பு பரசுராம அவதாரம்
கருணையுட னெடுக்கக் கர்த்த ரிருந்தனராம்

## பரசுராம அவதாரம்.

தாட்டிகமாகவேதான்
சமதக்கினிமுனிவன்
தவத்தி லவதரித்து ததிபரசு ராமனென்போன்
உதித்து யிருக்கையிலே
கார்த்தவீரி யர்ச்சுனன்
உண்மைகள் தானெழுந்து உற்ற பகையதனாற்
கதித்தசம தக்கினியாம்
பாசுராமன் கேசே
கடுங்கொலை செய்யக் காவலவன் றன்பார்த்து
இருபத்தோர் தலைமுறைக்கும்
அரியக்ஷத்திரியர் குலத்தை
என்கைமழு வாயுதத்தால் எமலோகஞ் சேர்ப்பேனென்று
மருவில்லா தேயிருந்து
பரசுராம அவதாரம்
மகிழ்வுடனே தான்காட்டி மாயன் மகிழ்ந்தபின்பு

## ஸ்ரீ ராம அவதாரம்

ஐயோத்தி யாபுரியை
அருமைமக னாகவந்து யாண்ட தசரதற்கு
சையோத்தியா மிதிலைச் அம்புவியிலே வளர்ந்து
தான்கலியா ணம்புரிந்து சனகராஜன் மகளைத்
சீரா யிருக்கையிலே தயவா யயோத்திவந்து
சென்று வனத்திற்குத் சிறியதாய் சொற்படிக்குச்
தாயாகும் பூங்குழலாள் தென்னிலங்கை இராவணனுங்
சார்ந்தஅநுமான் முதலோர் ஜானகியைக் கொண்டேகச்
இலங்கைதனிற் சென்று தானேமிகத் தொடர்ந்து
இனிய விபீஷணர்க்கு இராவணனைக் கொன்று
தலமா மயோத்திக்குத் இயல்மகுடந் தான்சூட்டி
தான்கூட்டி வந்து தம்பியிடன் ஜானகியும்
சீராக வாழ்ந்த தங்கமகுடம் புனைந்து
செய்ய திருக்கோலஞ் ஸ்ரீராம அவதாரஞ்
நேராய்ப் பலராமர் செம்மையுட னேகாட்டி
நேர்மை தனைக்காட்டி அவதாரஞ் செய்த
நெடுமாலுல் லாசமதாய்

## பலராம அவதாரம்.

சித்திமிகுந் தேவருக்கு
திரளரக்கரைத் தொலைக்கச் இடுக்கனது செய்த
உத்தமியாம் ரோகணிக்கு சிந்தை மகிழ்வோடு
உயர்ந்த பலபத்திரனாய் உண்மை மகனாக
அந்தமுடன் ராக்ஷதரை உற்பவித்துப் பூவுலகில்
அண்டர் பயந்தீர்த்த அன்னாள்தனிற் செயித்து
சிந்தை மகிழ்வாகக் அவதாரமுங் காட்டி
செய்ய திருக்கோலஞ் கிருஷ்ண வதாரம்
செம்மையுட னேகாட்டி



## கிருஷ்ணாவதாரம்.

வடமதுரை யாண்ட சூரசேனன் புதல்வன்
வசுதேவ னென்போன் மனமகிழ்வா யப்போது
திடமான தேவகியை மணம்புரிந்து தானுந்
தீவிரமாய் வாழ்நாளிற் தேவகியுங் கற்பமுற்று
ஆவணியா மாதம் அமரபக்ஷத் தட்டமியில்
அழகாக வேதான் அவனியோர் கொண்டாட
தேவர்களின் துன்பமதை தீர்ப்பதற்கு மாலுஞ்
சென்மித்த பிற்பாடு ஸ்ரீராகவ னாலே
ஆயர்பாடி வளர்ந்து யாதவர்களைக் காத்து
அடைவாய் வடமதுரை அன்பாகத் தானும்வந்து
மாயமுள்ள கஞ்சனையும் வதைத்து உலகாண்டு
வந்த அவதார மகிமைதனைக் காட்டிவிட்டு

## மோகினி அவதாரம்.

திருப்பாற் கடலை அசுர ரொருபுறம்
தேவ ரொருபுறமுஞ் சிறப்பாய்க் கடையையிலே
பிரக்குமமுதக் குடத்தைப் பேழ்வா யரக்கர்
பிடுங்கியந்தத் தேவருக்குப் பேணிநல் காதலினால்
வானவரெல் லாமயங்கி மாயோ னிடத்தில்
வந்துமுறை யிடவே மாயழக மூர்த்தியுந்தான்
தானவரை வெல்லவென்று சர்வலோ காதிபன்
ஜகன்மோ கனிரூபந் தானெடுக்க வேணுமென்று
கோதைவடி வெடுத்த கோபால கிருஷ்ணன்
கோதண்ட பாணி கோகிலம்போல் வந்துநிற்க
சீதையிவ ளென்றுலகோர் செப்பிடவே மகிழ்ந்து
செய் யரக்கர் தான் பார்க்க
புருவமோ இந்திரவில்லாம் பொருந்துநெற்றி நற்பிறையாம்
பூமான் விழிகள் பொருந்துநீ லோற்பலமாம்
திருமருவுஞ் செண்பகப்பூ திருமாலிருஞ் சோலை
செந்திரு மணாளன் திகழ்நாசி யாய்விளங்க
கபோலமினைக் கண்ணாடி காதிரெண்டு வெள்ளை
கழுத்தோ யிளங்கமுகு கவிந்தவயி றாலிலையாம்
உபயமணிப் புயங்கள் ஓங்கிய தோர்மூங்கில் ஒளிசையரவிந்தம்
உற்றவிதழ் செம்பவளம் ஓதுகிளி மூக்குநகம்
உந்தியோ நீர்ச்சுழியாம் உடுக்கா மிடைதுடைகள்
உயர்வாழைத் தண்டு ஓதுமொழி கோகிலமே
சிந்துமமுர்தஞ் சாயல் சீர்கொள் துலை யாம்பாதம்
செம்பஞ்சு பொற்பாதஞ் ஜெகன்மோ கினியாகி

அரக்கரெல்லாந் தான்மயங்கி அமரர்க் கனுகூலன்
அமுதமதைத் தான்வாங்கி அன்புபெற வேகாட்டி
சிறக்கவே தேவருக்குத் தேவாதி தேவன்
செங்கையாற் றான்கொடுத்து திருமால் மகிழ்வாக
சேர்ந்த அரக்கருக்கு அமுதங் கொடுக்காமல்
செய்ததனைக் காட்டி சிரியே யோடிடவே
சார்ந்த திருமாலழகன் மோகினி ரூபங்காட்டி
சந்தோஷங் கொண்டருளி சருவலோ காதிபனும்

(சந்தம் வேறு.)

சிந்தை மகிழ்வாக திருமா லவதாரம்
சிறப்பா யலங்கரித்து
பந்தமுடனே காட்டி இராமராயர் மண்டபத்தில்
பத்தியு லாத்தியபின்
செய்யுநெய் வேத்தியமுஞ் செங்கமலக் கண்ணனுக்குத்
தீபதூபங் கொடுத்து
உய்யராமா ராயருக்கு உலகளந்த மாயோன்
உயர்ந்த பரிவட்டமது
தான்மகிழ்ந்து சூட்டியபின் தாமோதரப் பெருமாள்
தங்கச்சிவிகை யின்மேல்
வான்மகிழ்ந்து கொண்டாட மாயாவ தாரன்
வைகைநதி யைக்கடந்து

## வெங்கிடசாமி நாயுடு மண்டபத்தில் இருத்தல்.

காணிக்கைக் கொப்பரையைக் கள்ளழக மூர்த்தி
கண்டுமன மகிழ்ந்து
மாணிக்கத்தாற் சமைத்த வெங்கிடசாமி நாயக்கர்
மண்டபத்திற் றானிருக்க
அந்திநேரங் கதிரோன் அய்யன் தெரிசனைகள்
அகமகிழ்ந்து மேற்றிசையில்
சிந்தையாய்த் தானேசரிய வேணுகோ பாலன்
மெய்குளிர்ந்து அப்போது
சந்தமுமே புகளும் மதுரை இராமயண்ச்
சாவடியைச் சேர்ந்தவொரு
சிந்தையுள்ள மண்டபத்தில் அழகமலை யானும்
வீற்றிருக்க வேகினைத்து
அங்கிருந்தோர் கொண்டாட மண்டபத்தில் மாயோன்
அகமகிழ்வாய் வந்தவுடன்



தங்கள்குழாங் களுடன் யாதவரெல்லோரும்
தரிசித்துப் போற்றிசெய்து
துங்கமுடன் கற்பூர தீபமொடு தூபந்
தரிதமுடனே கொடுத்து
அங்கமது பூரிக்க ஆதிமகா மூலம்
யாதவர்க்குக் காட்சிநல்கி
தேவர்கள் பூமாரிபெய்ய திருக்கண்கள் தோறும்
சென்றிருந்து அப்போது
மாவரங்கள் தான்கொடுத்து மைசூரார் மண்டபத்தில்
வந்திறங்கி மாயழகன்

## பூப்பல்லாக்கிற் சுவாமி கள்ளவேட மெடுத்தல்.

பூமியெல்லாங் கொண்டாட புண்யபுரு டோத்மன்
பொருந்து மபிஷேகம்
சாமிக்கியற்றியபின் சங்குசக்க ராயுதன்
சார்ந்தகள்ளர் போலாக
வலதுபுரங் கொண்டையிட்டு மாயால தாரனுக்கு
வாகுருமால் சுங்குவிட்டு
நிலமிகு காதினிலே தொங்கு கடுக்கன்
நிமலனுக்குத் தானணிந்து
அஞ்சுமணி வல்லயமும் சட்டி வலதாரி
அடுக்கா யலங்கரித்து
பஞ்சமெத்தையிட்ட புஸ்பப் பல்லாக்கில் மாயோன்
பரிவா ரெழும்போது
ஆயிரம்பொன் சப்பரத்தைத் தோள்குலுங்கித் தூக்கும்
அப்பன் கருப்பனுக்கு
மாவேக மாகவேதான் பரிவட்டங் கட்டி
மகிழ்வாய்ப் புறப்படவே
போய்வாரே னென்றுசொல்லி பூலோக நாதன்
புறப்பட்டார் பல்லாக்கில்
அந்தர துந்துமியும் அழகமலை நாதனுக்கு
ஆனைமேற் பேரிகையும்
வந்தெதிர்த்துத் தான்முழங்க முப்பத் திரண்டுவகை
வாத்தியங்க ளோலமிட
ஸ்ரீ வில்லிபுத் தூரில்வளர் நாச்சியா ரம்மனுக்குத்
திருமாலைப் பட்டனுப்பி
பூவிலுள்ளோர் தான்செலுத்தும் காணிக்கை உண்டியலைப்
புந்திமகிழ வேதான்

பதனம் பதனமென்று பாரளந்த மாயோன்
பாங்காய்ச்சவ் வாரிவிட்டார்

மதவான ரத்திரளும் மாயாவ தாரன்
மத்தாப்புச் சோதிமின்ன

அம்புவியோர் கொண்டாட ஆதி மூலத்துக்கு
அதிர்வெடிகள் தான்முழங்க

பம்புப்பூப் பல்லாக்கு பச்சைமா லக்ஷதற்குப்
பக்கமெல்லாந் தான்திரும்ப

பூக்குடைகள் சூழ்ந்துவர பலமண்ட பந்தோறும்
போய்ப்புகுந்து மாயழகன்

தாக்குடையோ னுன இராமசாமி அம்பலம்
தன்னுடைய மண்டபத்தில்

வந்திறங்கி மாயவனுஞ் சுந்தராஜ மூர்த்தி
மகிழ்வாய் விடாயாரி

சந்தோஷ மாகவேதான் ஜானகி மணாளனுந்
தானெழுந்தா ரப்போது

கள்ளர்வேட மெடுத்து மஞ்சி கூடத்தைக்
கண்டங்கு தானிருந்து

வள்ளமும் வாறாராம் மூணுமா வடிதனுக்கு
மாவேக மாகவேதான்

வந்தாராம் மாயழகர் வெள்ளை மண்டபத்தில்
மங்களமாய்த் தானிருந்து

பந்தன மாகவுமே ஈச்சனோடைப் பாதையிட்டு
பாங்காக வேயெழுந்து

கரைக்கிணர் கடந்து மறவர் மண்டபத்தைக்
கண்டுமன மகிழ்ந்து

பாரிலுள்ளோர் கொண்டாட அவ்விடத்திற் றானும்
பைந்துளபோன் தானிறங்கி

அன்றிரவெல்லாங் கூத்துப் பார்த்தா னந்தித்து
அம்மண்ட பத்தோர்க்கு

நன்றுபரி வட்டம் நலமாகக் கட்டி
நன்மையுடன் பல்லாக்கில்

## அப்பன் திருப்பதியி லிருத்தல்.

பூண்டிமண்டபங் கடந்து அப்பன் திருப்பதியில்
போயிறங்கி மாயழகர்

வேண்டியபேர் சூழ்ந்துவர விமலைமகிழ் நாதன்
வெகுவிநோ தங்களுடன்

கள்ளந்தரி கடந்து பொய்கைக் கரைப்பட்டி
கார்வண்ணன் வந்திருந்து



வல்லயங் கைப்பிடித்து மாயழக மூர்த்தி
வருகிறார் சாலைவழி

சீர்கொளம்மா மண்டபமும் காட்டுப்பிள்ளையார் கோவில்
சீக்கிரமா கக்கடந்து

பார்புகழுந் தேரடியைப் பாரளந்த மாயன்
பட்சமுடனே கடந்து

மயிலாடுஞ் சோலை வாசற் பிரதானி
மாகருப்பன் கோவில்முன்னே,

கயிலாய மேருவைப்போல் அழகமலைத் தெய்வம்
காயாம்பு வந்துநிற்க

ஆசையுட னவர்க்கு
அடைவாகக் கோவிலுக்குள்

சென்றபிஷே கங்கள்செய்து நெய்வேத்திய மோடு
தீபதூபங் கொடுத்து

அன்றங்கு வந்தோர்க்கு தீர்த்தஞ் சாதித்தது
அழகா யிருந்தனராம்

சீரோங்கும் மாமதுரைக் குருசாமிக் கோனுஞ்
சிறப்பாக யிச்சரிதை

பாரோர் புகழ அழகர் வர்ணிப்பை
பகர்ந்திடவு வேணுமென்று

வெகுநாளா யென்னிடத்தில் வேண்டியே கேட்ட
விருப்ப மதற்காக

தருந்தருமென் றெல்லோரும் மகிழ்வாகச் சொல்ல
தக்கசபானு வருடம்

ஆனிநல மாதம் அறுநான்கு தேதியினில்
அன்பாக வேதானும்

மானிலத்தோர் கொண்டாட கம்பன் பௌத்ரனென
வந்துலகிலே யுதித்த

இராமசாமிக் கவிஞன் பக்தி யுடனே
இயல்பாகச் சொன்னதுதி

தாரதரங்களுந் தெரிந்து அழகர் வர்ணிப்பைத்
தயவாய்ப் படிப்போர்க்கு

வாழி மிகவாழி நினைத்தோர்க்கும் கேட் போர்க்கும்
மக்களுடன் வாழ்ந்திருக்க

வாழி மிகவாழி அழகேச நாதன்
மங்களமாய் வாழியதே.

பெரிய அழகர் வர்ணிப்பு முற்றிற்று.

Q22:417
N55
102153



# விளம்பரம்.

| | |
|---|---|
| பெரிய அழகர் வர்ணிப்பு | 0—8—0 |
| சிறிய அழகர் வர்ணிப்பு | 0—4—0 |
| பெரிய பாகவத வர்ணிப்பு | 0-12—0 |
| கிருஷ்ணவதாரன் வர்ணிப்பு | 0—4—0 |
| மாயாவதாரன் வர்ணிப்பு | 0—4—0 |
| தசாவதார வர்ணிப்பு | 0—4—0 |
| பாண்டி முனி வர்ணிப்பு | 0—2—0 |
| கோடாங்கி மாலை 1-வது பாகம் | 0—8—0 |
| ஷை 2வது பாகம் பனிரெண்டு | |
| ராசி மூத்துக்குறி சேர்ந்தது | 0—8—0 |
| வீமன் சண்டை வர்ணிப்பு | 0—8—0 |
| கிருஷ்ணன் தூதுக்கும்மி | 0—3—0 |
| இராமாயணக் கும்மி | 0—4—0 |
| குது நூல் சாஸ்திரம் | 0—3—0 |
| கந்தரனுபூதி மூல மந்திர சக்கரத்துடன் | 0—8—0 |

Q22
N55

மேற்கண்ட புத்தகங்களும் இன்னும் மற்ற வேண்டிய வயித்திய தினுசுகளும் நேரிலும் வீ பீ தபால் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம் கேட்லாக் வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் அனுப்பக்கூடும். இப்படிக்கு

குரு. இராமசாமிக் கோன்,

புத்தகசாலை புதுமண்டபம் மதுரை